05.11.2015

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழக மீனவருக்கு புதிய படகு: மத்திய அரசு ரூ.380 கோடி ஒதுக்கீடு



புதுடில்லி:இந்தியா - இலங்கை பகுதியில் அடி மடி வலையை பயன்படுத்தி, மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களுக்கு 380 கோடி ரூபாய்க்கு படகுகளை வழங்க மத்திய விவசாயத்துறை முன்வந்துள்ளது.இந்தப் பகுதியில் அடி மடி வலையை பயன்படுத்தி மீன் பிடிக்கும் படகுகள் 3,000த்திற்கும் மேற்பட்டவை உள்ளன. அவற்றுக்கு பதிலாக 50 மீட்டர் நீளம் கொண்ட புதிய படகுகள் வழங்கப்பட உள்ளன. இந்தப் படகுகள் ஒவ்வொன்றும் 60 லட்ச ரூபாய் விலை கொண்டவை; இத்தகைய படகுகளால் கடலின் அடிமட்டத்தில் உள்ள உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படாது.இத்தகைய படகின் விலையில் பாதியை மத்திய அரசு மானியமாக வழங்க வேண்டும்; அதற்காக 950 கோடி ரூபாய் வழங்க

வேண்டும் என தமிழக அரசு கோரிக்கை விடுத்திருந்தது.ஆனால் மத்திய அரசும், தமிழக அரசும் 40:60 என்ற வீதத்தில் பகிர்ந்து கொள்வது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, மத்திய அரசு 380 கோடி ரூபாய் ஒதுக்க உள்ளது.

## ராமநாதபுரம் உட்பட 7 மாவட்டத்தில் பசுந்தீவன விதை உற்பத்தி பண்ணை

ராமநாதபுரம், :ராமநாதபுரம் உட்பட 7 மாவட்டங்களில் பசுந்தீவன விதை உற்பத்தி பண்ணை அமைக்கப்படுகிறது.கால்நடைகளுக்கு உலர், அடர், பசுந்தீவனம் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் இலவச ஆடு, மாடுகள் வழங்கும் திட்டத்தால் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் மாநிலம் முழுவதும் உலர், பசுந்தீவனத்திற்கு பற்றாக்குறை நிலவுகிறது.

மேய்ச்சல் நிலம் அழிப்பு, வறட்சி போன்றவற்றால் பசுந்தீவனம் பற்றாக்குறை 25 சதவீதம் உள்ளது. இதனால் கால்நடைகளை வளர்க்க முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். இதனை தவிர்க்க மாநில அரசு தீவன அபிவிருத்தி திட்டத்தில் ராமநாதபுரம் உட்பட 7 மாவட்ட கால்நடை பண்ணைகளில் பசுந்தீவன விதை உற்பத்தி செய்யப்பட உள்ளது.விதை உற்பத்தி பண்ணை ஒவ்வொரு மாவட்டத்திலும் 60 முதல் 70 ஏக்கர் வரை அமைக்கப்படுகிறது. மொத்தம் 480 ஏக்கரில் அமைக்க ரூ.4.71 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவன விதைகள் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படும்.

## கடல் ஆமை முட்டைகளைபாதுகாக்க காவலர்கள் நியமனம்

ராமநாதபுரம், :மன்னார் வளைகுடாவில் கடல் ஆமை முட்டைகளை பாதுகாக்க வனத்துறை சார்பில் 14 தடுப்பு காவலர்கள்

நியமிக்கப்பட்டுள்ளனர்.மன்னார் வளைகுடாவில் பச்சை, பெருந்தலை, தோணி, ஆலிவ், அலுங்கு ஆகிய 5 வகை கடல் ஆமைகள் உள்ளன. இவை ஆழ்கடலில் இனப்பெருக்கம் செய்கின்றன. கருவுறும் பெண் ஆமைகள், கூட்டம், கூட்டமாக கடற்கரைக்கு வந்து முட்டையிடும். இவை நவம்பர் முதல் ஏப்ரல் வரை முட்டையிடும்.ஒவ்வொரு ஆமையும் மணலில் குழி தோண்டி 200 முட்டைகள் வரை இடும். பின் அவற்றை மூடிவிடும். ஏழு முதல் 10 வாரங்களில் முட்டைகள் பொரிக்கப்பட்டு, குஞ்சுகள் வெளிவரும். பின் அவை நீந்தி கடலுக்குள் சென்றுவிடும்.மணற்குழிக்குள் உள்ள ஆமை முட்டைகளை பறவைகள், நாய்கள் சேதப்படுத்துகின்றன. சிலர் அவற்றை உணவுக்கு பயன்படுத்துகின்றனர். ஆமை அரிதான இனத்தை சேர்ந்ததால் அவற்றின் முட்டைகளை பாதுகாக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து கடல் ஆமை முட்டையிடும் பகுதிகளாக கண்டறியப்பட்ட ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், கீழக்கரை, துாத்துக்குடி மாவட்டம் வேம்பார் பகுதிகளில் வனத்துறை சார்பில் 14 தடுப்பு காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நவ., 15 முதல் கடற்கரை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட உள்ளனர்.

## மின்னலுக்கு உயிர்பெறும் அபூர்வ வகை 'அம்புக்காளான்'வத்திராயிருப்பு அருகே விளைச்சல்



வத்திராயிருப்பு :மழைக்கு வளர்ந்து பலன் கொடுக்கும் மரம், செடி, கொடி போல், மின்னலுக்கு உயிர்பெற்று வளரும் பூஞ்சை வகை தாவரங்களில் ஒன்றான 'அம்புக்காளான்', வத்திராயிருப்பு அருகே விளைச்சல் கண்டுள்ளது.வீட்டில் செயற்கையாக வளர்க்கப்படும் காளான்கள் தவிர, இயற்கையாக காடு, வயல், வரப்புகளில் தானாக வளரும் காளான்களில் மிகச்சில வகை காளான்கள் மட்டும் மின்னலை பயன்படுத்தி உயிர்பெறுகின்றன. அதில் 'அம்புக்காளான்' மிக அபூர்வ வகையை சேர்ந்தது. ஒருஅடி உயரம் வரை வளரும் இதை பறித்த அன்றே சமைத்து சாப்பிடாவிட்டால் மறுநாள் கெட்டுவிடும்.அடர்ந்த வனப்பகுதியில் மட்டும் மரத்தின் வேர்ப்பகுதியில் இவை வளர்கிறது. மரங்களின் வேர்ப்பகுதியில் கரையான்களால் அரிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மரத்துகள்களில் ஆங்காங்கு மொட்டுகள் உருவாகி தயார்நிலையில் இருக்கும். மின்னல் ஏற்படும்போது அந்த ஒளியை பயன்படுத்தி உடனடியாக மொட்டுகள் விரிவடைகின்றன. அதன்பிறகு இருநாட்களுக்குள் ஒரு அடி உயரத்திற்கு வளர்ந்து விடுகிறது. மருத்துவ குணம்விருதுநர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே கோவிலாறு அணைப்பகுதியை யொட்டிய மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் இவை விளைந்துள்ளது. இது

நெஞ்சக நோய், கல்லீரல், சிறுநீரக பாதிப்பு போன்றவற்றை நீக்கும் மருத்துவ குணம்கொண்டது.

**கன மழைக்கு வாய்ப்பு**



சென்னை: சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:வங்க கடலில் புதிதாக உருவாகும் காற்று அழுத்த தாழ்வு நிலையை கவனித்து வருகிறோம். அதனால் ஏற்படும் தாக்கங்களை இப்போதைக்கு தெரிவிக்க இயலாது. அரபி கடலில் ஏற்பட்டுள்ள காற்று அழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகள் மற்றும் புதுச்சேரியில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளது, என்றார்.

**மதுரை, திண்டுக்கல், தேனியில் மழை பேரணையில் வெளுத்து வாங்கியது**



மதுரை,: மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் நேற்று கனமழை பெய்தது. பேரணையில் அதிகபட்சமாக 41 மி.மீ., மழை பதிவானது.இம்மாவட்டங்களில் சில நாட்களாக கன மழை தொடர்கிறது. பெரியாறு, வைகை, சோத்துப்பாறை உட்பட அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்வதால் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

நேற்றைய மழையளவுபெரியாறு அணை 02.04 மி.மீ., சண்முகாநதி 08, வீரபாண்டி 04, வைகை 14.08, மஞ்சளாறு 21, மருதாநதி 15.02, சோத்துப்பாறை 11, பேரணை 41. குப்பணம்பட்டி 06.04, ஆண்டிப்பட்டி 30, மதுரை 21, கள்ளந்திரி 08, சிட்டம்பட்டி, 17.08, சாத்தையாறு 12, மேட்டுப்பட்டி 30, மேலூர் 00.02, தனியாமங்கலம் 02, விரகனூர் 13.08, கொடைக்கானல் 27.06 என பதிவானது.பெரியாறு அணைக்கு நீர் வரத்து 2015 கன அடி. வெளியேற்றம் 511 கன அடி. வைகைக்கு வரத்து 840. வெளியேற்றம் 60. சோத்துப்பாறைக்கு வரத்து 57. வெளியேற்றம் 57. மருதாநதிக்கு வரத்து 92. வெளியேற்றம் 40. மஞ்சளாறுக்கு வரத்து 196. வெளியேற்றம் 196. சண்முகாநதிக்கு வரத்து 10. வெளியேற்றம் இல்லை. சாத்தையாறு அணைக்கு வரத்து, வெளியேற்றமும் இல்லை

அணைகள் நீர்மட்டம்

(நேற்றைய நிலவரம்)

பெரியாறு : 125.511 அடி (மொத்தம் 152)

வைகை : 49.34 (71.07)

சோத்துப்பாறை : 126.00 (126)

மஞ்சளாறு : 56.80 (70)

சண்முகாநதி : 28.80 (52)

மருதாநதி : 55.83 (64)

சாத்தையாறு : 10.70 (29)

## கோழித் தீவனத்திற்காக கேரளா செல்லும் சூடை மீன்: வரத்து குறைவால் பாதிப்பு



ராமநாதபுரம்:கோழித் தீவனத்திற்காக கேரளா செல்லும் சூடை, காரை மீன் வரத்து குறைவால் வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர்.பாம்பன் பகுதியில் 100 க்கும் மேற்பட்ட படகுகளில் மீன் பிடிக்கப்படுகின்றன. இங்கு பிடிக்கப்படும் சூடை, காரை மீன்களை வியாபாரிகள் வாங்கி கிலோ ரூ.10 க்கு கேரளாவிற்கு அனுப்புகின்றனர். அவற்றை அங்கு கோழித்தீவனமாகவும், பயிர்களுக்கு உரமாகவும் பயன்படுத்துகின்றனர்.

படகுகள் கரை திரும்பும் ஒவ்வொரு முறையும் 30 டன்கள் வரை அனுப்பப்படுகின்றன.மீன் வளம் குறைவு, இந்திய கடலோர காவல்படை கெடுபிடி போன்ற காரணங்களால் 20 க்கும் குறைவான படகுகளே நேற்றுமுன்தினம் கடலுக்கு சென்றன. இதனால் குறைவான மீன்களே கிடைத்தன. நேற்று கரைதிரும்பிய மீனவர்களிடம் 3 டன் சூடை, காரை மீன்களே இருந்தன. வரத்து குறைந்ததால் வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர். வியாபாரிகள் கூறுகையில், " ஒவ்வொரு முறையும் 30 முதல் 40 டன் வரை சூடை, காரை மீன்களை கேரளாவிற்கு அனுப்புவோம். வரத்து குறைந்ததால் ஆர்டருக்கு ஏற்ப அனுப்ப முடியவில்லை. இதனால் எங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது," என்றனர்.

**வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை**



சென்னை,:'வங்க கடலின் தென்கிழக்கு பகுதியில், புதிய காற்று அழுத்த தாழ்வு நிலை உருவாகி வருகிறது. இதனால், இந்த வார இறுதியில், தமிழக கடலோர பகுதியில் கன மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.மேலடுக்கு சுழற்சிவடகிழக்கு பருவ மழை அக்., 28ல் துவங்கிய போது, வங்க கடலில், இலங்கை அருகே, காற்று அழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டது. இரண்டு நாட்களுக்கு பின், காற்று மேலடுக்கு

சுழற்சியாக மாறியது.நவ., 7, 8 தேதிகளில்...தற்போது, புதிதாக காற்று அழுத்த தாழ்வு நிலை, வங்க கடலின் தென்கிழக்கு பகுதியில் உருவாகி வருகிறது. இது வலுவடைந்து, நவ., 7, 8 தேதிகளில், தமிழகம், ஆந்திர மாநில கடலோர பகுதிகளில் கன மழை பெய்யும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:வங்க கடலில் புதிதாக உருவாகும், காற்று அழுத்த தாழ்வு நிலையை கவனித்து வருகிறோம். அதனால், ஏற்படும் தாக்கங்களை இப்போதைக்கு தெரிவிக்க இயலாது. அரபி கடலில் ஏற்பட்டுள்ள காற்று அழுத்த தாழ்வு நிலையால், தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகள் மற்றும் புதுச்சேரியில், ஒரு சில இடங்களில், இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம்.இவ்வாறு அவர் கூறினார்.கடந்த, 24 மணி நேரத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், உத்தரமேரூர், ஸ்ரீபெரும்புதுார்; திருவள்ளூர் மாவட்டம், தாமரைப்பாக்கத்தில் அதிகபட்சமாக, 9 செ.மீ., மழை பெய்துள்ளது. திருச்சி, நெல்லை, கிருஷ்ணகிரி, கரூர், திண்டுக்கல், விழுப்புரம், வேலுார், திருப்பூர், நாகப்பட்டினம், தர்மபுரி, துாத்துக்குடி, மதுரை, திருப்பூர், சிவகங்கை மாவட்டங்களில், 1 முதல், 8 செ.மீ., வரை மழை பெய்துள்ளது.வலுவடையும்வங்க கடலில் புதிதாக உருவாகி வரும் காற்று அழுத்த தாழ்வு நிலை குறித்து, டில்லியை தலைமையிடமாக கொண்டு செயல்படும், 'ஸ்கைமெட்' தனியார் வானிலை நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை:வங்க கடலில் நிலவும் மேலடுக்கு சுழற்சி, காற்று அழுத்த தாழ்வு நிலையாக மாறி, நவ., 7, 8ல், தமிழகம் மற்றும் ஆந்திர கடலோர பகுதியில், கன மழை பெய்யலாம். தற்போது நிலவும்

சூழலில், புயலாக வலுவடையாமல், காற்று அழுத்த தாழ்வு நிலையாக நீடிக்கவே வாய்ப்பு உள்ளது. இதனால், ஆந்திர, தமிழக கடலோர பகுதிகள் மட்டும் அல்லாமல், இரு மாநிலங்களின் உள் மாவட்டங்களிலும் மழை பெய்யலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களில் நவ.,15 வரை பருவமழை கொட்டித்தீர்க்கும்**

கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களில் அக்.,28ல் ஆரம்பித்த வடகிழக்குப் பருவமழை, நேற்று வரை, 124 மி.மீ., பெய்துள்ளது. 'இன்னும், 250 மி.மீ., மழை பெய்ய வாய்ப்புள்ளது' என்றும், 'நவ.,15 வரை, மழை வெளுத்து வாங்கும்' என்றும், தமிழ்நாடு வேளாண் பல்கலை காலநிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

மழை எப்படி இருக்கும்

தமிழ்நாடு வேளாண் பல்கலை காலநிலை ஆய்வு மைய முன்னாள் தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், "அக்., 28ல் வடகிழக்கு பருவமழை துவங்கியது. நவ.,15ல் உச்சகட்டத்தை எட்டும். அதன்பின் படிப்படியாக குறையும். டிச., முதல் வாரத்தில் மெல்ல பெய்து நின்றுவிடும்.

**நேற்று பதிவான மழைஅளவு**

| அணை | மழையளவு (மி.மீட்டரில்) |
|---|---|
| சோலையாறு அணை | 5.0 |
| பரம்பிக்குளம் | 3.0 |
| ஆழியாறு | 5.6 |
| திருமூர்த்தி | 7.0 |
| அமராவதி | 8.0 |
| மேல்நீராறு | 20.0 |
| கீழ் நீராறு | 25.0 |
| வேட்டைக்காரன்புதூர் | 5.4 |
| மணக்கடவு | 11.2 |
| காடம்பாறை | 17.0 |
| சுல்தான்பேட்டை | 16.0 |
| நல்லூர் | 4.0 |
| சர்க்கார்பதி | 10.0 |
| அமராவதி அணைப்பகுதி | 8.0 |
| நல்லாறு | 4.0 |
| திருமூர்த்தி அணைப்பகுதி | 7.0 |
| உடுமலை நகர் | 24.6 |
| மடத்துக்குளம் | 78.0 |
| கொமரலிங்கம் | 34.0 |

அக்.,21, 22ல் துவங்க வேண்டிய மழை காலதாமதமாக துவங்கியது. பருவமழைக் காலம், 45 நாட்கள். அதில், 24 நாள் மட்டுமே மழை பெய்யும். அது தான் தற்போது பெய்து வருகிறது. இந்த ஆண்டு எதிர்பார்த்த மழை கிடைக்கும்," என்றார். வேளாண் பல்கலை காலநிலை ஆய்வு மைய தலைவர் பன்னீர் செல்வம் கூறுகையில், "கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை கை கொடுத்தது. 371 மி.மீ., மழை பெய்தது. இந்த ஆண்டு, நேற்றைய நிலவரப்படி, 124 மி.மீ., மழை பொழிந்துள்ளது. மேலும், 250 மி.மீ., வரை பெய்யும். தென்மேற்கு பருவமழை, 210 மி.மீ., மழை பெய்யும் எதிர்பார்த்தோம், ஆனால் நமக்கு கிடைத்தது, 146, மி.மீ., தான். அந்த பருவத்தில் கிடைக்காத மழை,இந்தப்பருவத்தில் கிடைப்பதற்கான சூழல் தற்போது நிலவுகிறது," என்றார்.பேரிடர் மேலாண் குழு துவக்கம்கோவை பேரிடர் மேலாண் குழு, தாசில்தார் வனிதா தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.மாவட்டத்தின், பத்து தாலுகாவில் இருந்தும், மழை, வெள்ளச்சேதம் குறித்த தகவல்களை தெரிவிப்பதற்கு, கலெக்டர் அலுவலகத்தில், 1077 என்ற எண் கொண்ட, கட்டணமில்லாத தொலைபேசி நிறுவப்பட்டுள்ளது.பொதுமக்கள், இந்த தொலைபேசி எண்ணுக்கு, 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு, மழை, வெள்ள பாதிப்பு தகவல்களை தெரிவிக்கலாம். தகவல்கள், உடனடியாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.கண்காணிக்கும் பொதுப்பணித்துறை நொய்யலாற்றில் பெருக்கெடுக்கும் தண்ணீரை, அணைக்கட்டுகளின் வாயிலாக, பல்வேறு குளங்களுக்கு கொண்டு செல்லும் பணியை, பொதுப்பணித் துறையினர் மேற்கொண்டுள்ளனர். குளங்களுக்கு தண்ணீர் செல்லும் பாதையில் அடைப்போ, தடையோ இருந்தால் அவற்றை அப்புறப்படுத்தி, குளங்களுக்கு, சீரான நீர் வரத்தை ஏற்படுத்த, பொதுப்

பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.அதன்படி, நொய்யல் நீர் வரத்து, குளங்கள், வாய்க்கால்களை கண்காணிக்கும் பணியில், 24 மணி நேரமும், பொதுப்பணித்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.மழை குறித்த ஆலோசனை கூட்டம், கோவை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. நெடுஞ்சாலை, பொதுப்பணி, தீயணைப்பு, போக்குவரத்துக்கழகம், போக்குவரத்துத்துறை, மின்வாரியம், குடிநீர்வடிகால் வாரியம், சுகாதாரம், வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, உள்ளாட்சித்துறையினர் பங்கேற்றனர். அரசு அதிகாரிகள், மழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து அறிவுறுத்தப்பட்டது.

விவசாயிகள் மகிழ்ச்சி

சென்னனூார் விவசாயி கோவிந்தராஜன் கூறியதாவது:எதிர்பார்த்த மழை கிடைத்தது மகிழ்ச்சி, நாற்று நடவுக்கு ஏற்ற தருணம், விவசாயிகளுக்கு பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டிய காலத்தில் பெய்த இந்த மழை, அனைவருக்கும் பயனுள்ளது. இதுவே, விவசாயிகளுக்கு தீபாவளி. இவ்வாறு, கோவிந்தராஜன் தெரிவித்தார்.கோவை மாவட்டம் பொள்ளாச்சி, ஆனைமலை, வேட்டைக்காரன்புதுார், கிணத்துக்கடவு, நெகமம் பகுதிகளில் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. இது, நிலக்கடலை, சோளம் உள்ளிட்ட மானாவாரி பயிர் சாகுபடி செய்திருந்த விவசாயிகள் மட்டுமின்றி, தென்னை சாகுபடியாளர்களுக்கும் மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. விவசாய நிலம் மட்டுமின்றி மேய்ச்சல் நிலங்களும், ரோட்டோர வேலிகளும் பசுமைக்கு மாறியுள்ளதால், கால்நடைகளுக்கு குறைவில்லாத தீவனம் கிடைத்து விட்டதாக விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர். பொள்ளாச்சியை சேர்ந்த, பாசன விவசாயிகள் சங்க தலைவர் பரமசிவம் கூறுகையில், "மழையால், பாசன கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்து விடும். இந்தாண்டில் தீவனமும், நல்ல விளைச்சலும் கிடைக்கும் என்ற

நம்பிக்கை ஏற்பட்டுள்ளது," என்றார். திருப்பூர் மாவட்டம் வடகிழக்கு பருவ மழையை ஆதாரமாக கொண்டு, உடுமலை பகுதியில், கொண்டைக்கடலை, கொத்தமல்லி, சோளம் உட்பட மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. மழை துவங்கியுள்ளதால், விளைநிலங்களில், விதைப்பு பணிகளும், தென்னை, மக்காச்சோள பயிர்களுக்கு உரமிடும் பணிகளும் தீவிரமடைந்துள்ளன.

**திருப்பூர் மாவட்டத்தில் கனமழை பெய்யலாம்**

'திருப்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் நேற்று காலை வரை, அவிநாசியில், 27 மி.மீ., திருப்பூர், 3.1 மி.மீ., உடுமலை, 24.6 மி.மீ., தாராபுரம், 15 மி.மீ., காங்கயம், 8.2 மி.மீ., மூலனூர், 41 மி.மீ., மழை பெய்துள்ளது.தமிழ்நாடு வேளாண் பல்கலை கால நிலை ஆய்வு மைய, முன்னாள் தலைவர் பாலசுப்ரமணியம் கூறியதாவது:திருப்பூர் மாவட்டத்தில், நடப்பாண்டு வடகிழக்கு பருவ மழை, 25 சதவீதம் அதிகரிக்கும். அதாவது, மாவட்டத்தின் சராசரி மழையளவு, 344.02 மி.மீ., இந்தாண்டு, 80 முதல், 90 மி.மீ., வரை மழை அதிகரிக்கும். மேலடுக்கு சுழற்சி என்ற அடிப்படையில், பருவ மழை பெய்வதால், மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும், ஒரே மாதிரியாக மழைப்பொழிவு இருக்கும். காங்கயம், வெள்ளக்கோவில், திருப்பூர் போன்ற வறட்சி பகுதிகளில், சிறிது குறைவாகவும், மற்ற பகுதிகளில் கூடுதலாகவும் பெய்ய வாய்ப்புள்ளது.ஆண்டு மழைப்பொழிவில், திருப்பூர் மாவட்டத்துக்கு, அதிக பலன் அளிப்பது வடகிழக்கு பருவ மழையே; இந்தாண்டு, அம்மழையும் கூடுதலாக பெய்ய வாய்ப்புள்ளது. தற்போதைய வானிலை முன்னறிவிப்பாக, நவ.,8 வரை, திருப்பூர் மாவட்ட பகுதிகளில் கன மழைக்கான வாய்ப்புள்ளது.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தம்**

● திருப்பூர் மாவட்டம் உடுமலை அமராவதி அணை நீர் மட்டம், நேற்று மொத்த கொள்ளளவு, 90 அடியில், 57.68, அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 447 கன அடி நீர்வரத்து இருந்தது. பாசனப்பகுதிகளில், மழை காரணமாக, புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு, அணையிலிருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், அணை நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

● திருமூர்த்தி அணையிலிருந்து, பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்காக அக்., 12ல் தண்ணீர் திறக்கப்பட்டது. ஒரு சுற்றுக்கு, தண்ணீர் வழங்கப்பட்டுள்ள நிலையில், தொகுப்பு அணைகளிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. அணை நீர் மட்டம், மொத்த கொள்ளளவு, 60 அடியில், 41.17 அடியாக உள்ளது.

**தேயிலை உற்பத்தி அதிகரிக்கும்**

வால்பாறையில், ஒரு வாரமாக வடகிழக்குப் பருவமழை பெய்து வருகிறது. நேற்று முன் தினம் மாலை முதல், இடைவிடாமல் பெய்யும் மழையால், மின் உற்பத்திக்கு பயன்படும் காடம்பாறை, சோலையாறு அணைகளில் நீர் மட்டம் அதிகரித்த வண்ணம் உள்ளது. தொடர் மழையால் வால்பாறையில் கடும் குளிர் நிலவுகிறது. தேயிலை செடிகளும், துளிர் விடத்துவங்கிள்ளன. 'தேயிலை உற்பத்தி அதிகரிக்கும்' என 'உபாசி' தேயிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். மொத்தம், 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை, 104.65 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 318 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. வினாடிக்கு, 890 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதேபோல், 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணை நீர்மட்டம், நேற்று, 52.82 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு,

572 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது; வினாடிக்கு, 608 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

**மின்தேவை பூர்த்தியாகும்**

நீலகிரி மாவட்டத்தில், குந்தா, பைக்காரா நீர் மின் திட்டத்தின் கீழ் உள்ள, 12 மின் நிலையங்கள் மூலம், தினமும், 833.65 மெகாவாட் மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

60 மெகாவாட், நீலகிரி மாவட்டத்தின் பயன்பாட்டுக்கு போகலாக, மிதமுள்ள மின்சாரம், கோவை, ஈரோடு, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களின் மின் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுகிறது. நடப்பாண்டு தென் மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. எனினும், பெரும்பாலான அணைகளில், 50 சதவீத அளவுக்கு தண்ணீர் இருப்பு இருந்தது. கடந்த ஒரு வாரமாக பெய்த வடகிழக்கு பருவ மழையால், மஞ்சூர் பகுதிகளில் உள்ள குந்தா, கெத்தை, எமரால்டு, அவலாஞ்சி, அப்பர்பவானி உள்ளிட்ட அணைகளில் ஐந்து அடி முதல் எட்டு அடி வரை தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது.பைக்காரா நீர் மின் திட்டத்தின் கீழ் உள்ள மாயார், முக்குறுத்தி, மரவக்கண்டி, பார்சன்ஸ்வேலி அணைகளுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. தற்போதுள்ள தண்ணீர் அளவை கருத்தில் கொண்டு, காலை மற்றும் மாலை நேரத்தில் ஏற்படும் உச்ச மின் தேவையை பூர்த்தி செய்யும் பணி, தடையின்றி நடந்து வருகிறது.**வெள்ளத்தில் சிக்கி ஒருவர் பலி**

கோவையில், நேற்று முன்தினம் பெய்த கனமழைக்கு, வடக்கு தாலுகா, கிருஷ்ணராயபுரத்தை சேர்ந்த, கூலித்தொழிலாளி முருகன், 45, பலியானார். மேட்டுப்பாளையம், கோவையில் வீட்டின் சுற்றுச்சுவர் இடிந்து சேதமடைந்தது. பலியானவரின் குடும்பத்துக்கு, நான்கு லட்சம் ரூபாய் வழங்குவதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

**கோவையில் நள்ளிரவில் பலத்த மழை**

கோவை : கோவையின் பலபகுதிகளிலும் நள்ளிரவில் பலத்த மழை பெய்தது. தாழ்வான பகுதிகளில் தேங்கிய வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்ததால் மக்கள் அவதியடைந்தனர். மதுரையின் பல பகுதிகளிலும் நள்ளிரவில் நல்ல மழை பெய்தது.

### மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2அடி உயர்வு

மேட்டூர் : நீர்வரத்து அதிகரிப்பால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்து நீர்மட்டம் 66.95 அடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்வரத்து, 13,956 கனஅடியிலிருந்து 20,684 கனஅடியாக அதிகரித்தது. அணையின், நீர் இருப்பு 30.13 டி.எம்.சி.,யாக உள்ளது. அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக திறக்கப்பட்ட 400 கனஅடி நீர் நிறுத்தப்பட்டது.

### நாளை முதல் 3 அணைகளை திறக்க முதல்வர் உத்தரவு

சென்னை : 11 கால்வாய்களின் மூலம் பயன்பெறும், பாசன பரப்புகளின் பிசான பருவ சாகுபடிக்காக, பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளிலிருந்து நாளை முதல் நீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். நீர்திறப்பால் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 86,107 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### உலகின் பெரிய இயற்கை குகை

ஒன்பது கி.மீ., தூரம் கொண்ட குகை. அதற்கு உள்ளேயே ஆறு ஓடுகிறது. ஏரியும்இருக்கிறது. தவிர மரங்கள் அடர்ந்த காடும் உள்ளது. இது மனிதர்களால் உருவாக்கப்பட்டதல்ல; இயற்கையாகவே அமைந்த ஒன்று. இந்த குகை தான் உலகிலேயே மிகப்பெரிய இயற்கை குகை. இதுவியட்நாமின் குவாங் பின்மாகாணத்தில் இருக்கிறது.

இதன் பெயர் சன் டூங். இது வியட்நாம் - லாவோஸ் எல்லையில் அமைந்துள்ளது. மலை மீது அமைந்துள்ளஇக்குகையின் நீளம் 9 கி.மீ. இதில் 4 கி.மீ., தூரம் வரை மிகவும் கரடு முரடானசிக்கலான வழியாக உள்ளது. சன் டூங் என்பதற்கு 'மலையாறு குகை' என பொருள். மலையில் ஓடும் ஆறு இந்த குகை வழியாக செல்கிறது.2 முதல் 5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நீர் அரிப்பினால் இந்த குகை உருவாகி இருக்கலாம் என கூறப்படுகிறது.உலகில் அமைந்துள்ள இயற்கை குகைகளின் அமைப்புகள் பார்ப்பதற்கு பிரமிப்பை ஏற்படுத்தும். சில குகைகள் அபாயகரமானதாகவும் இருக்கும். தண்ணீர் தொடர்ந்து ஓடுவதாலேயே இது போன்ற குகைகள் தோன்றுகின்றன.இந்தசன் டூங் குகையை அந்தப்பகுதியை சேர்ந்த ஒருவர் 1991ம் ஆண்டு தான் கண்டுபிடித்தார். அதற்கு முன் அந்தஇடத்துக்கு யாரும் சென்றதில்லை. செங்குத்தான மலைப்பாறைகளின் நடுவில் நீர் ஓடும் சத்தத்தை வைத்து தான் அப்பகுதியை சேர்ந்தவர் சென்று பார்த்தார்.



2009ல் இக்குகையை 'பிரிட்டிஷ் குகை ஆராய்ச்சி கூட்டமைப்பினர்' ஆய்வு செய்தனர். அதன் பின்தான் சன் டூங் குகைபிரபலமடைய துவங்கியது.அப்போது தான் இது உலகின் பெரிய குகை என

அறிவிக்கப்பட்டது. 2013லிருந்து தான் இங்கு சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர். மலையேற்ற பயிற்சி பெற்ற, நல்ல உடல் தகுதி பெற்றவர்கள் மட்டுமே செல்ல முடியும். ஆண்டுதோறும் சில நூறு பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. பிப்ரவரி முதல் ஆகஸ்ட் வரை மட்டுமே குகைகள் செல்ல முடியும். ஆகஸ்ட்க்கு பின் கனமழை பெய்ய துவங்கிவிடும் என்பதால் அனுமதி வழங்கப்படுவதில்லை.நீளம் : 9 கி.மீ., தூரம்அகலம் : 650 அடி உயரம் : 500 அடி

## துவரம் பருப்பு விற்பனை அமைச்சர் ஆய்வு

சென்னை :துவரம் பருப்பு விற்பனை குறித்து, கூட்டுறவு துறை அமைச்சர் தலைமையில் அதிகாரிகள் குழு, ஆய்வு செய்தது. துவரம் பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த, மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. அதன்படி, மத்திய அரசு இறக்குமதி செய்திருந்த துவரையில் இருந்து, தமிழகத்திற்கு, 500 டன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதை துவரம் பருப்பாக மாற்றி, கிலோ, 110 ரூபாய் என, 91 கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகளில், அரசு விற்பனை செய்து வருகிறது. இதற்கு, மக்களிடம் வரவேற்பு காணப்படுகிறது. இந்நிலையில், பருப்பு விற்பனை குறித்து, கூட்டுறவு துறை அமைச்சர் செல்லுார் ராஜு, சென்னை, நந்தம்பாக்கம், காஞ்சிபுரம் கூட்டுறவு பண்டக சாலை அங்காடியில் நேற்று, ஆய்வு செய்தார். அவருடன், அதிகாரிகள் இருந்தனர். இதுகுறித்து, உணவு மற்றும் கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:மத்திய அரசு, ஒரு கிலோ முழு துவரையை, 69.70 ரூபாய்க்கு வழங்கியுள்ளது. போக்குவரத்து, ஊழியர் சம்பளம் என, ஒரு கிலோ துவரம் பருப்புக்கு, 110 ரூபாய் செலவாகிறது. அதே விலைக்கு கூட்டுறவு, அமுதம் அங்காடிகளில் விற்கப்படுகிறது. பொதுமக்களிடம் வரவேற்பு காணப்படுவதால், தனியாரும், அதே விலைக்கு விற்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதுவரை, 75 ஆயிரம்

கிலோ பருப்பு விற்பனையாகி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## இயற்கை உணவுப் பொருள் எது நிபுணர்கள் விளக்கம்

புதுச்சேரி: "தண்ணீரும் பூச்சிக்கொல்லி மருந்து கலக்காமல் இருந்தால்தான் உண்மையான இயற்கை உணவுப் பொருளாக இருக்க முடியும்" என, இயற்கை உணவு நிபுணர்கள் தெரிவித்தனர்.

புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் துறை, உழவர்கரை நகராட்சி மகளிர் நுகர்வோர் அமைப்பு சார்பில் இயற்கை உணவு குறித்து ஒருநாள் பயிலரங்கம் அன்னை தெரசா பட்ட மேற்படிப்பு மையத்தில் நேற்று நடந்தது. நுகர்வோர் அமைப்புத் தலைவர் திலகவதி தலைமை தாங்கினார். செயலாளர் லாவண்யா வரவேற்றார். குடிமைப் பொருள் வழங்கல் துறை இயக்குனர் பிரியதர்ஷினி சிறப்புரையாற்றி, விழா மலரை வெளியிட்டார்.

கூட்டத்தில் இயற்கை உணவுப் பொருள் குறித்து நிபுணர்கள் கூறுகையில், ' இயற்கை விவசாயத்தில் விளைந்த உணவு பொருட்களை சாப்பிட வேண்டும். சந்தையில் கிடைக்கும் அனைத்தும் இயற்கை உணவு என கூற முடியாது. இயற்கை உணவு பொருட்களை கண்டுபிடிக்க போதிய தொழில்நுட்பங்கள் இல்லை. பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாதது மட்டுமே இயற்கை உணவு பொருள் என்கின்றனர். தண்ணீரை சார்ந்து இயற்கை உணவு பொருளின் தன்மை கணக்கிடப்பட வேண்டும். செடியில் மட்டுமின்றி, தண்ணீரும் பூச்சிக்கொல்லி இல்லாமல் இருந்தால் தான் உண்மையான இயற்கை உணவு பொருளாக இருக்க முடியும்' என கூறினர். டீன் முரளி, குளுனி மருத்துவமனை முதன்மை மருத்துவ அதிகாரி ரங்கநாத், வேளாண் துறை இயக்குனர் ராமமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## இயந்திர நெல் நடவு செயல்விளக்கம்

காரைக்கால்: காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், இயந்திர நெல் நடவு பற்றிய செயல்விளக்கம் அளிக்கப் பட்டது.

திருநள்ளார் தென்னங்குடி கிராமத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் முறை குறித்து, வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் சுரேஷ் முன்னிலையில், செயல் விளக்கம் நடந்தது.

வேளாண் அறிவியல் நிலையத்தலைவர் சுரேஷ் கூறுகையில், 'மாவட்ட விவசாயிகளுக்காக, தட்டு நாற்றங்கால் அமைத்து, குறைந்த வாடகையில் ஏக்கருக்கு ரூ.2000 என்ற விகிதத்தில் இயந்திரம் மூலம் நெல் நாற்று நடவு செய்து தரப்படுகிறது. இயந்திரம் மூலமாக நெல் நடவு செய்வதால் விதையளவு, நீர் அளவு, தேவையான பயிர் இடைவெளி பராமரித்தல், களையெடுக்கும் கருவி பயன்படுத்துதல் போன்றவற்றின் மூலம், வயலில் வேலையாட்கள் பெரிதும் குறைக்கப்படுவதால் சாகுபடி செலவு குறைந்து, அதிக விளைச்சல் பெற வழி செய்கிறது.

கடந்த ஆண்டு 20 டன் விதை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டது. இந்தாண்டு, 26 டன் விதை உற்பத்தி செய்யப் பட்டுள்ளது' என்றார். நிலைய முதல்வர் விஜயகுமார், பண்ணை மேலாளர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**மரக்கன்று நடும் விழா**

புதுச்சேரி: அரியூர் வெங்கடேஸ்வரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், எச்.டி.எப்.சி., வங்கி சார்பில், இயற்கை மேம்பாட்டிற்காக மரக்கன்று நடும் விழா நடந்தது.

கல்லூரி பொது மேலாளர் சவுந்தரராஜன் தலைமை தாங்கினார். எச்.டி.எப்.சி., வங்கி துணைத்தலைவர் கணேச சுப்ரமணியம், முதன்மை மேலாளர் திருமலைவாசன் மரக்கன்று நட்டனர்.

ஏற்பாடுகளை, கல்லூாி திட்ட இயக்குநர் சீனிவாசன், மனிதவள மேம்பாட்டு மேலாளர் லலிதா ஆகியோர் செய்திருந்தனர்.

இயற்கை பாதுகாப்பு குறித்து என்.எஸ்.எஸ்., மாணவர்கள் உரையாற்றினர். வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரி என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் நாகராஜ் தலைமையில் மாணவர்கள் மரக்கன்று நட்டனர். பல் மருத்துவக் கல்லூரி மனிதவள மேலாளர் ஹரிபாஸ்கர் நன்றி கூறினார்.

**விளைபொருளை மதிப்பு கூட்டி தயாரிக்க சிறப்பு பயிற்சி! விவசாயத்தை லாபகரமான தொழிலாக்க திட்டம்**

வாலாஜாபாத் : வேளாண் விளைபொருட்களை, மதிப்புக் கூட்டிய பொருட்களாக மாற்றி விற்பனை செய்ய, பண்ணை மகளிருக்கு, சிறப்பு பயிற்சியளிக்கும் முகாம்களை நடத்த, வேளாண் விற்பனை துறை முடிவு செய்து உள்ளது. இதன் மூலம், லாபகரமான தொழிலாக விவசாயம் மாறும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 13 வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள் உள்ளன. இந்த மையங்களில், தோட்டக்கலை, வேளாண்மை, வேளாண் விற்பனை, விதை சான்றளிப்பு மற்றும் விதை பண்ணை ஆகிய துறைகள் இயங்கி வருகின்றன.

மகளிர் குழுக்களுக்கு...

இந்த 13 விரிவாக்க மையங்களில், தலா, 20 பேர் கொண்ட, 26 அம்மா பண்ணை மகளிர் குழுக்கள் துவங்கப்பட்டு உள்ளன. இந்த மகளிர் குழுக்கள், வேளாண் மற்றும் தோட்டக்கலை துறைகள் சார்ந்த பயிர்களை

சாகுபடி செய்து, விளைபொருட்களை விற்பனை செய்து வருகின்றன.விளைபொருட்களை, மதிப்புக் கூட்டிய பொருட்களாக விவசாயிகளே தயாரித்து, அருகில் உள்ள, உழவர் சந்தைகளில் விற்பனை செய்து லாபம் ஈட்ட, அம்மா பண்ணை மகளிருக்கு அறிவுறுத்தவும்; அதற்கான சிறப்பு பயிற்சிகள் அளிக்கவும்; கையேடு வழங்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

கடனுதவியும் உண்டு

இதுகுறித்து, வேளாண் விற்பனை துறை துணை இயக்குனர் சந்துரு கூறியதாவது:விளைபொருட்களை மதிப்புக் கூட்டிய பொருட்களாக எவ்வாறு தயாரிப்பது; அதை எப்படி சந்தைப் படுத்துவது என்பது குறித்து, வேளாண் விற்பனை துறை வல்லுனர்கள், அம்மா பண்ணை மகளிருக்கு, சிறப்பு பயிற்சியளிக்க உள்ளனர். இப்பயிற்சிகள், வட்டார விரிவாக்க மையங்களால் நடத்தப்பட உள்ளன. பயிற்சி பெற்றவர்களுக்கு கடனுதவி அளிக்க உள்ளோம். இதன் மூலம் விவசாயம் லாபகரமாக தொழிலாக மாறும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மதிப்புக் கூட்டுவது எப்படி?

நெல் உற்பத்தி செய்து, அதை அப்படியே வியாபாரிக்கு விற்பனை செய்யாமல், அரிசியாக மாற்றி, விற்பனை செய்தல்; அரிசியை அரைத்து மாவாக்கி, விற்பனை செய்தல்; ஒரு உருளைக் கிழங்கை அப்படியே வியாபாரிக்கு விற்பனை செய்யாமல், அதை சிப்சாக மாற்றி, விற்பனை செய்தல் போன்றவை, விவசாயிக்கு அதிக லாபம் தருவதாக அமையும். இம்மாதிரி வேளாண் பொருட்களை சந்தை, நுகர்வு நோக்கில் மாற்றுவதே வேளாண் பொருட்களுக்கு, மதிப்புக் கூட்டுவதாக கூறப்படுகிறது.

## கொளவாய் ஏரி மீன்பிடி உரிமைக்கு 12ம் தேதி ஏலம்

காஞ்சிபுரம் : 'கொளவாய் நீர்த்தேக்கத்தின் மீன்பிடி உரிமைக்கான பொது ஏலம், வரும், 12ம் தேதி நடைபெற உள்ளது' என, மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி வெளியிட்ட செய்திக்குறிப்பு:மீன் உற்பத்தியை அதிகப்படுத்தும் விதமாக, மீன்வள துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, 53 நீர்த்தேக்கங்களை, மீன்வள துறை குத்தகைக்கு விடுகிறது. அந்த வகையில், 2015ம் ஆண்டில், காஞ்சிபுரம் மாவட்டம், கொளவாய் நீர்த்தேக்கத்தின் மீன்பிடி உரிமையை, ஐந்து ஆண்டுகளுக்கு, பொது ஏலம் மூலம் குத்தகை விடப்பட உள்ளது.ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப படிவம் மற்றும் நிபந்தனைகள் நகல் www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியில் இருந்து, விருப்பமுடையவர், பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள மீன்துறை ஆணையர் அலுவலகத்தில் வரும், 12ம் தேதி நடைபெறும் ஒப்பந்தப்புள்ளி ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மயிலம் பகுதி வயல்களில் செயல் விளக்க முகாம்

மயிலம்: ஆலகிராமத்தில் கரும்பு வயல்களில் காட்டு பன்றியை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்த செயல் விளக்க முகாம் நடந்தது.

மயிலம் வட்டாரத்திலுள்ள கூட்டேரிப்பட்டு, ஆலகிராமம், ரெட்டணை, கேணிப்பட்டு, தென்பசியார், பந்தமங்கலம் உள்ளிட்ட 47 கிராமங்களில், விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இப்பகுதி விவசாயிகள் பயிரிடும் கரும்பு, நெல், மணிலா, திணை, கிழங்கு வகைகள், காய்கறி பயிர்களை காட்டுப் பன்றிகள் இரவு நேரத்தில் மகசூல்களை சேதப்படுத்துகின்றன.

இதனால் இப்பகுதி விவசாயிகள் கடந்த சில ஆண் டுகளாக மிகுந்த அவதியடைந்து வருகின்றனர். பயிர் தொழிலில் விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர்.

இதனையடுத்து, முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சக்கரை ஆலை நிர்வாகத்தினர் விவசாயிகளுக்கு பன்றிகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்த செயல் விளக்கத்தை, ஆலகிராமத்தில் உள்ள பிரகாஷ் என்பவரின் கரும்பு வயலில் செய்து காண்பித்தனர்.

மயிலம் பகுதி கரும்பு கோட்ட அலுவலர் முத்துகுமரன், களப்பணியாளர் முத்துவேல் ஆகியோர் ஈகோடான் என்ற இயற்கை வாசனை திரவத்தை நீரில் கலந்து, அதில் சணல் கயிற்றை இரண்டு மணி நேரம் ஊர வைத்தனர். பின்னர், வயல் வரப்புகளை சுற்றி நான்குபுறமும் கட்டுவதற்கு உழவர்களுக்கு பயிற்சியளித்தனர். இந்த செயல் விளக்க முகாமில் விவசாயிகள் பிரகாஷ், பொன்னுசாமி, பன்னீர்செல்வம், ஏழுமலை, சீனுவாசன் கலந்து கொண்டனர்.

### மேட்டூர் அணை நீர்வரத்து 13,956 கனஅடியாக உயர்வு

மேட்டூர்: தமிழக எல்லையிலுள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதியில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 5,386 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 13,956 கனஅடியாக அதிகரித்தது. டெல்டா மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை நீடிப்பதால், மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு, 1,000 கனஅடி நீர் மட்டுமே பாசனத்துக்கு திறக்கப்படுகிறது. இதனால், நீர்திறப்பை விட, நீர்வரத்து கூடுதலாக இருப்பதால் நேற்று முன்தினம், 63.5 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 65 அடியாக உயர்ந்தது. நேற்று ஒரே நாளில் நீர்மட்டம், 1.5 அடி அதிகரித்துள்ளது.

## கெலவரபள்ளி அணை நீர்பிடிப்பு பகுதியில் கனமழை: அணையில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

ஓசூர்: ஓசூர், கெலவரப்பள்ளி அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்ததால், அணையில் இருந்து திறந்து விடப்படும், தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஓசூர், கெலவரப்பள்ளி அணையின் நீர்பிடிப்பு பகுதியான, பெங்களூர் நந்திஹில்ஸ் மலையில், கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் கடந்த, 2 ம் தேதி முதல், கெலவரப்பள்ளி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த, 2 ம் தேதி நிலவரப்படி, வினாடிக்கு, 197 கன அடியாக இருந்த தண்ணீர் வரத்து, 4 ம் தேதி மதியம், 723 கன அடியாக உயர்ந்தது. இதனால் தென்பெண்ணை ஆற்றில் கடந்த, 2 ம் தேதி வரை, திறந்து விடப்பட்ட, 280 கன அடிக்கு பதில் தற்போது, இரு மதகுகள் வழியாக, வினாடிக்கு, 723 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் காரணமாக, கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை வேகமாக நிரம்பும் வாய்ப்பு உள்ளது. இதேபோல் கெலவரப்பள்ளி அணையில் இருந்து, வலது கால்வாயில் வினாடிக்கு, 26 கன அடியும், இடதுபுற கால்வாயில் வினாடிக்கு, 62 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் அணையில் இருந்து வினாடிக்கு, 811 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. கெலவரப்பள்ளி அணையின் முழு கொள்ளளவான, 44.28 அடியில், 42.48 அடி அளவிற்கு தண்ணீர் இருப்பு உள்ளது. பெங்களூரு நந்திஹில்ஸ் மலையில் இரவு நேரங்களில் கன மழை பெய்தால், கெலவரப்பள்ளி அணைக்கு வரும் தண்ணீரின் அளவு மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. அப்படி தண்ணீர் வரத்து அதிகரித்தால், தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்படும். அதனால், தென்பெண்ணை ஆற்றங்கரை ஓரங்களில் உள்ள மக்கள், தென்பெண்ணை ஆற்றை கடக்க வேண்டாம் என, அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## தொடர் மழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு

கிருஷ்ணகிரி: தமிழகத்தில் வட கிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக ஓசூரில், 51 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. சூளகிரி, 45, ஊத்தங்கரை, 20, தேன்கனிக்கோட்டை, 15, கிருஷ்ணகிரி, 10.2, ராயக்கோட்டை, 10, பெனுகொண்டாபுரம், 5.2, போச்சம்பள்ளி, 4.2, அஞ்செட்டி, 3, நெடுங்கல், 2.4 மில்லி மீட்டர் என, மாவட்டம் முழுவதும் மொத்தம், 166 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. நேற்று மதியமும் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கன மழை பெய்தது. குறிப்பாக, தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்ததால், நேற்று மதியம் கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. அணையின் மொத்த நீர்மட்டமான, 52 அடியில், தற்போது, 49.40 கன அடிநீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு, 1,396 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து, 351 கன அடிநீர் வெளியேற்றப்படுகிறது.

இது குறித்து கே.ஆர்.பி., அணை உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ் கூறியதாவது: தொடர் மழையால், அணைக்கு நீர் வரத்து தற்போது அதிகரித்துள்ளது. மேலும், கெலவரப்பள்ளி அணையில் இருந்து திறந்துவிடப்பட்டுள்ள, 700 கனஅடிநீர், இன்று(5ம் தேதி) காலை கே.ஆர்.பி., அணைக்கு வந்து சேரும் என்பதால், அணைக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஒரே இடத்தில் வேளாண்விரிவாக்க அலுவலகங்கள்

திண்டுக்கல்,:திண்டுக்கல்லில் 8 வட்டாரங்களில் புதிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் கட்ட 12 கோடி ரூபாய் அரசு

ஒதுக்கியுள்ளது.விவசாயகள் பயன் பெறும் வகையில் முக்கிய வட்டாரங்களில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தனித்தனியே விவசாயம் சார்ந்த துறைகளுக்கு செல்ல வேண்டியது இருக்காது. அரசு ஒரு வட்டாரத்திற்கு ரூ.1.50 கோடி மதிப்பில் மொத்தம் ரூ.12 கோடியில், திண்டுக்கல்லில் ஆத்தூர், சாணார்பட்டி, குஜிலியம்பாறை, வத்தலகுண்டு, தப்பம்பட்டி, ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம் மற்றும் வடமதுரையில் புதியதாக ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் அமைக்க உள்ளது. அதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணி துவங்க உள்ளது. வேளாண்துறை இணை இயக்குனர் சம்பத்குமார் கூறுகையில்,""விரிவாக்க மையத்தில், வேளாண் பொறியியல் துறை, விதை சான்று, வேளாண் வணிகம், நீர் மேலாண்மை, தோட்டக்கலை, ஆலோசனை கூடத்துடன் கட்டப்பட உள்ளது. இனி விவசாயிகள் திண்டுக்கல் வேளாண் அலுவலகத்திற்கு வர வேண்டிய கட்டாயம் இருக்காது. அந்தந்த வட்டாரங்களில் விரைவில் கட்டப்பட உள்ள மையத்திற்கு செல்லலாம்', என்றார்.

### வேடசந்தூர் பகுதியில் பசுமைகடலை விவசாயத்தில் செழுமை

வேடசந்தூர்:வேடசந்தூர் தாலுகா பகுதியில் கடலை சாகுபடி செழிப்புடன் உள்ளது.திண்டுக்கல் மாவட்டத்திலேயே வேடசந்தூர் தாலுகாதான் வறட்சியான பகுதி. இங்குள்ள பெரும்பாலான விவசாயிகள், மானாவாரி விவசாயத்தையே நம்பியுள்ளனர். சமீப காலமாக போதிய பருவ மழை பெய்து வருவதால், நிலக்கடலை சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கோவிலூர் ஊராட்சி துருவத்துப்பட்டி பகுதியில், பயிரிடப்பட்ட நிலக்கடலை செடிகள் நன்கு வளர்ந்துள்ளன. தற்போது களை எடுப்பு பணிகள் தீவிரமடைந்துள்ளன. பருவ மழை அடுத்தடுத்து பெய்து வருவதால், மானாவாரி விவசாயத்தில் விவசாயிகள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆனாலும் கூலி

ஆட்கள் கிடைக்காததால் விவசாயிகள் சிரமப்படுவதாக மனம் குமுறுகின்றனர். இதே மழை தொடர்ந்தால், விவசாயமும், கால்நடை வளர்ப்பும் செழித்தோங்கும் என விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பண்ணைப்பள்ளி துவக்க விழா

ரெட்டியார்சத்திரம்: வேளாண்துறையின் அட்மா திட்டத்தின்கீழ், டி.புதுப்பட்டியில் திருந்திய நெல் சாகுபடி குறித்த பண்ணைப்பள்ளி துவக்க விழா நடந்தது. மாநிலத்திட்ட துணை இயக்குனர் தங்கசாமி தலைமை வகித்தார். வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மனோகரன் வரவேற்றார். காந்திகிராம வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், தொழில்நுட்ப வல்லுனர் ஷாகின்தாஜ் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கினர்.திருந்திய நெல் சாகுபடியில் நாற்றங்கால் தயாரிப்பு முதல், நடவு, பூச்சி மற்றும் களை நிர்வாகம், தண்ணீர், உர மேலாண்மை, அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டது. உதவி விதை அலுவலர் சரவணன், விதை நேர்த்தியின் அவசியம் குறித்து பேசினார். திட்ட பணியாளர்கள் காவேரிமணி, மருதராஜன், முருகேசன் பங்கேற்றனர்.

## மஞ்சளாறு அணை நிரம்பி வழிந்தும் நீரின்றி காயும் நெல் நாற்றங்கால்கள்

தேவதானப்பட்டி,:தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணை நிரம்பி, உபரிநீர் ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது, ஆனால் முதல்போக நெல் சாகுபடிக்கு நீர் கிடைக்காமல் டி.வாடிப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி கிராமங்களில் நாற்றங்கால்கள் காய்ந்து வருகின்றன.தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணையின் உயரம் 57 அடியாகும். இந்த அணை நீரால் திண்டுக்கல், தேனி

மாவட்டங்களில் புதிய, பழைய ஆயக்கட்டு பகுதிகளில் 5,200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று, முதல் போக நெல் சாகுபடி நடந்து வருகிறது.

அணையின் நீர்பிடிப்பு பகுதியான மூலாறு, வரட்டாறு, மஞ்சளாறு, தலையாறு பகுதியில் தொடர்ந்து பெய்யும் மழையால் நீர் வரத்து அதிகரித்து, தற்போது அணையில் 56.80 அடி நீர் உள்ளது. அணைக்கு வரும் 196 கன அடி நீரும் அப்படியே ஆற்றில் திறந்து விடப்பட்டு வருகிறது. கடந்த 20 நாட்களாக ஆற்றில் உபரி நீர் சென்று கொண்டிருக்கிறது. வழக்கமாக ஆண்டுதோறும் அக்., 15 க்கு பிறகு அணை திறக்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டில் அக்., முதல் வாரத்தில் அணை நிறைந்து, திறப்பதற்கான சாத்தியக் கூறுகளை இல்லை. அணையை திறக்க அரசின் அனுமதிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்த உடன் அணை திறக்கப்படும் என்று அதிகாரிகள் கூறி வருகின்றனர். இந்த அணை நீரை நம்பி டி.வாடிப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி, தேவதானப்பட்டி பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி நடந்து வருகிறது. நடப்பு ஆண்டு சாகுபடிக்காக கடந்த 30 நாட்களுக்கு முன்பே விவசாயிகள் நாற்றங்கால் அமைத்தனர். தற்போது நாற்றுகள் வளர்ந்து நடவு செய்வதற்கு தயாராக உள்ளன. ஆனால், தண்ணீர் இல்லாததால் நாற்றங்கால்கள் காய்ந்து வருகின்றன. இதுகுறித்து டி.வாடிப்பட்டி முன்னாள் ஊராட்சி தலைவர் பி.மகாராஜன் கூறுகையில், ""நடப்பு ஆண்டு அக்., 1 ல் அணை நிரம்பியும் இன்று வரை திறக்கப்படவில்லை. இதனால் நாற்றங்கால்கள் காய்ந்து வருகின்றன. விரைவாக முதல் போக நெல் சாகுபடிக்கு நீர் திறக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

**மாட்டுப்பட்டி அணை நிரம்புகிறது மின் உற்பத்தி துவக்க நடவடிக்கை**

மூணாறு:மாட்டுப்பட்டி அணை நிரம்பி வருவதால், மின் உற்பத்தியை துவக்க கேரள மின்வாரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்து

வருகின்றனர்.மூணாறில் இருந்து 13 கி.மீ., தொலைவில் உள்ள மாட்டுப்பட்டி அணையை, கேரளா மின்வாரியம் பராமரித்து வருகிறது. முக்கிய சுற்றுலா பகுதியாக விளங்கி வரும் இந்த அணையில் சுற்றுலாத்துறை மற்றும் மின் வாரியம் சார்பில் சுற்றுலா படகுகள் இயக்கப்படுகிறது.

162 அடி உயரமுள்ள இந்த அணை, ஆண்டுதோறும் தென் மேற்கு பருவ மழையால் அணை நிரம்பும். கடந்தாண்டு அணையின் நீர் மட்டம் முழுகொள்ளளவை எட்டிய பிறகும் தண்ணீர் திறக்கப்படவில்லை. மின் உற்பத்திக்காக மட்டும் அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டது. மாட்டுப்பட்டி நீர் மின் நிலையத்தில் 2 மெகா வாட் மின் உற்பத்தி நடந்து வந்தது.இங்கு பராமரிப்பு பணிகளுக்கு கடந்த 5 மாதங்களாக மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் மழையால் அணையின் நீர்மட்ம் 159 அடியை எட்டியுள்ளது. நீர் பிடிப்பு பகுதியில் தினமும் மழை பெய்து வருவதால், அணையின் நீர் மட்டம் ஓரிரு நாளில் முழு கொள்ளளவை எட்டி விடும். அதன்பிறகு அணையை திறக்காமல், மின் உற்பத்தியை துவக்கிவிட கேரள மின்வாரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

## பயிர்கள் பச்சை நிறத்துடன் செழித்துவளர உதவும் "மீன் அமினோ' அமிலம் வேளாண் கல்லூரி மாணவிகள் தயாரிப்பு

கம்பம்:பயிர் பச்சை நிறத்துடன் நல்ல செழிப்புடன் வளர்ந்து பயன்கொடுக்க," மீன் அமினோ' என்ற அமிலங்களை பயன்படுத்த வேண்டும் என்றும், அதை எவ்வாறு தயாரிப்பது என்றும் குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு விளக்கினார்கள்.பெரியகுளம் குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் இந்து, கீர்த்தனா, சந்தியா, உமாமகேஸ்வரி, காளியம்மாள், அஞ்சலி, சின்னுமோள், பார்கவி, உமா,ஹேசில் நிவேதிதா

ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் கம்பத்தில் தங்கி விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்பங்களை விளக்கி வருகின்றனர். அவர்கள் கூறியதாவது: தற்போது ரசாயன உரங்கள் பயன்படுத்துவதால் நிலங்களின் வளம் பாதிப்படைந்துள்ளது. எனவே, பயிர் செழித்து வளர்வதற்கும், பச்சை நிறத்துடன் அதிக மகசூல் தருவதற்கும் "மீன் அமினோ' என்ற அமிலத்தை பயன்படுத்த வேண்டும். அதை தயாரிப்பதற்கு மீன் கடைகளில் இருந்து கிடைக்கும் செதில், குடல், வால், தலை போன்றவைகளை எடுத்து, அதில் சமஅளவு பனைவெல்லம் சேர்த்து நன்கு பிசைந்து ஒரு பிளாஸ்டிக் வாளிக்குள் மூடி வைக்க வேண்டும். 25 நாட்கள் கழித்து எடுத்து, நன்கு கலக்கினால் டானிக் கிடைக்கும். 10 லிட்டர் தண்ணீருக்கு 100 மில்லி கலந்து பயிரில் தெளித்தால் பயிர் நன்கு பச்சை நிறத்துடன் செழித்து வளரும். அதிக மகசூல் கிடைக்கும். அனைத்து பயிர்களுக்கும் இதை பயன்படுத்தலாம், என்றனர்.

## உர மூடை விலை விர்ர்ர்...விவசாயிகள் கவலை

முதுகுளத்தூர்,:முதுகுளத்தூரில் உரமூடைகளின் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். முதுகுளத்தூர் தாலுகாவிற்குட்பட்ட 267 கிராமங்களில் 5 ஆயிரம் எக்டேருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் உள்ளது. தற்போது மழை சீசன் துவங்கியுள்ளதால் நெல், மிளகாய், கத்தரி, உளுந்து , வெங்காயம், மல்லி பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் மும்முரமாக உள்ளனர். நெல், மிளகாய் பயிர்கள் செழித்து வளர அடி உரம் அவசியமாகிறது. முதுகுளத்தூரில் 4 சில்லறை உர வியாபாரிகள் உள்ளனர். ஒரு மூடை யூரியா ரூ. 272.50, டி.ஏ.பி.,ரூ. 1,150 என அரசு விலை நிர்ணயித்துள்ளது. ஆனால் யூரியா மூடை ரூ.380, டி.ஏ.பி., ரூ. 1,400 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு உரமூடைகள் விற்பனை செய்வதால் விவசாயிகள்

அதிர்ச்சியடைந்துள்ளனர்.

விவசாயி ராமலிங்கம் கூறுகையில், ""உரமூடைகள் வெளிமார்க்கெட்டில் யூரியா நூறு ரூபாய், டி.ஏ.பி., 250 ரூபாய் கூடுதலாக விற்பனை செய்கின்றனர். வேறுவழியின்றி அதிக விலை கொடுத்து உரமூடைகள் வாங்கவேண்டியுள்ளது. விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் மானிய விலையில் உர மூடைகள் வழங்க வேண்டும்,"என்றார். வேளாண்மை துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" உரமூடைகளை அதிக விலைக்கு விற்பனை செய்யக்கூடாது என சில்லறை வியாபாரிகளுக்கு உ<த்தரவிட்டுள்ளோம், மீறினால் "லைசென்ஸ்' ரத்து செய்யபடும்", என்றார்.

## **நெல்லையில் விடிய விடிய மழை பள்ளிகளுக்கு ஒருநாள் விடுமுறை**

திருநெல்வேலி,:நெல்லையில் விடிய விடிய பெய்த மழையினால் பள்ளிகளுக்கு நேற்று விடுமுறை விடப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்துவருகிறது. நேற்றுமுன்தினம் இரவில் துவங்கிய நேற்று காலை வரையிலும் நெல்லை, நாங்குநேரி சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இந்த பகுதியில் 60 மி.மீ.,மழை பதிவாகியிருந்தது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான மேற்குதொடர்ச்சி மலையில் போதிய மழை இல்லை. இருப்பினும் நேற்றுமுன்தினத்தைவிட நேற்று பாபநாசம் இரண்டு அடி உயர்ந்து 84.75 அடியை எட்டியது. சேர்வலாறு அணையும் ஒரு அடி உயர்ந்து 98.72 அடியை எட்டியது. மணிமுத்தாறு அணையில் பெரியமாற்றம் இல்லாமல் 64.90 அடியிலேயே நீர்மட்டம் உள்ளது. கருப்பாநதி அணை ஒரு அடி நீர்மட்டம் உயர்ந்து 70.21 அடியானது. குண்டாறு அணை, வடக்குபச்சையாறு, நம்பியாறு, அடவிநயினார் உள்ளிட்ட அணைகளுக்கும் ஓரளவு நீர்வரத்து உள்ளது. நேற்று காலையில் விடாது மழை பெய்ததால் அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை விடப்பட்டது.

கல்லூரிகளுக்கு தற்போது செமஸ்டர் தேர்வு நடப்பதால் மாணவர்கள் வந்துசென்றனர். இந்த ஆண்டு வடகிழக்குபருவமழை துவக்கத்திலேயே தொடர்ந்து பெய்துவருவதால் அணைகள் விரைவில் நிரம்பும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மழைக்காலத்தில் நெல் பயிரை பாதுகாக்க யோசனை**

மழைக் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் முனைவர் டி. பாஸ்கரன், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இராஜா. ரமேஷ் ஆகியோர் நெல் வயல்களில் மழைக் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக கூறியதாவது:

தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில், நெல் பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், எதிர்பார்க்கும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலில் இருந்து நெற்பயிரைக் காக்கவும் கீழ்கண்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

1. வடிகால் வசதியை உடனடியாக ஏற்படுத்தி வயல்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2. இளம் நெல்பயிர்கள் அழுகிப் போவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அவ்வாறான சமயங்களில் அதே வயதுடைய நாற்றுகளை அந்த இடத்தில் மீண்டும் நடவு செய்ய வேண்டும்.

3. சற்று வயதான நெல் பயிராக இருந்தால் வயலில் அதிக தூர்கள் இருக்கும் குத்திலிருந்து சில தூர்களைப் பிடிங்கி, நெற்பயிர் அழுகிய இடங்களில் நட்டு பயிர் எண்ணிக்கையைச் சரியாக பராமரிக்க வேண்டும்.

ஊட்டச்சத்து குறைபாட்டை சரிசெய்யும் வழிமுறைகள்: தண்ணீரால் மூழ்கிய பயிர்களில் தழைச்சத்து குறைபாட்டைப் போக்குவதற்கு மழை இல்லாதபோது ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம், 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு- இவற்றைக் கலந்து ஓர் இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள் காலை இதனுடன் 17 கிலோ பொட்டாஷ் உரத்தையும் கலந்து தெளிக்க வேண்டும்.

இலை வழி உரமாக அளிக்க வேண்டுமெனில் 2 கிலோ யூரியாவுடன் 1 கிலோ சிங்சல்பேட்டை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும் அல்லது 4 கிலோ டி.ஏ.பி.யை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து ஓர் இரவு முழுவதும் வைத்திருந்து, மறுநாள் காலை வடித்து தெளிந்த நீருடன் 2 கிலோ பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து 190 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இலைச்சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த வழிமுறைகள்: தற்போது நிலவும் மந்தமான சீதோஷ்ணநிலையில் இலைச்சுருட்டுப்புழு, குருத்து ஈ மற்றும் புகையான், ஆனைக்கொம்பன் ஈ போன்ற பூச்சிகளின் தாக்குதல் மற்றும் குலை நோய் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இலைச்சுருட்டுப் புழு தாக்கப்பட்ட வயல்களில் இலைகள் நீளவாக்கில் சுருட்டப்பட்டு, பட்டுப் போன்ற மெல்லிய இழைகளால் இணைத்து புழுக்கள் உள்ளிருந்து கொண்டு இலைகளை சுரண்டி உண்ணுவதால், இலைகளில் பச்சையம் சுரண்டப்பட்ட இடங்களில் நீளவாக்கில் வெள்ளை நிற பட்டையாகக் காணப்படும்.

இதனைக் கட்டுப்படுத்திட ஒரு ஏக்கருக்கு வேப்பெண்ணெய் 3 சதவீதம், வேப்பங்கொட்டைக் கரைசல் 5 சதவீதம் ஃப்ளுபெண்டியாமைட் 20

மில்லி, குளோரன்ட்ரான்லிபுரோல் 60 மில்லி, கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 400 கிராம், புரோபினோபாஸ் 400 மில்லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தோ அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 7 கிலோ மருந்தை 10 கிலோ மணலுடன் கலந்து தூவியோ கட்டுப்படுத்தலாம்.

குருத்து ஈ, புகையான், ஆனைக்கொம்பன் ஈயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:

குருத்து ஈ தாக்குதலுக்குண்டான இளம் இலைகளில் மெல்லிய துளைகள் காணப்படும். முதிர்ச்சியடைந்த இலைகளில் தாக்கப்பட்ட பகுதியில் இலை முறிந்து காணப்படும். ஆனைக்கொம்பன் ஈயினால் தாக்கப்பட்ட இலைகள் விரியாமல் வெங்காய இலை போன்று சுருண்டு நீண்டு காணப்படும். இவற்றை கட்டுப்படுத்திட அசடிராக்டின் 500 மில்லி அல்லது தயாமீத்தாக்சாம் 40 கிராம் அல்லது குளோரிபைரிபாஸ் 500 மில்லி, கார்போசல்பான் 400 மில்லி அல்லது பிப்ரோனில் 400 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

குலை நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: குலை நோயினால் பாதிக்கப்பட்ட நெற்பயிரின் இலையில் நீல நிற புள்ளிகள் உருவாகி இரண்டு பக்க நுனிகளும் விரிவடைந்து, நடுப் பகுதியில் அகலமாகவும், முனைகள் கூராகவும் உடைய நீண்ட கண் வடிவத்துடன் காணப்படும். இந்த கண் வடிவப் புள்ளிகளின் ஓரங்கள் கரும்பழுப்பும், உள்பகுதியில் இளம் பச்சை அல்லது சாம்பல் நிறமும் கொண்டிருக்கும்.

குலைநோயைக் கட்டுப்படுத்திட 1 கிலோ சூடோமோனஸ் புளோரசன்ஸ் உடன் 1 லிட்டர் புளித்த தயிரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

பாக்டீரியா இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: பாக்டீரியா இலைக் கருகல் நோயினால் தாக்கப்பட்ட இலைகள் நுனியிலிருந்து கீழ்நோக்கி பக்கவாட்டில் மஞ்சள் நிறமடைந்து, பின்னர்

கருகிக் காணப்படும். வைக்கோல் நிறமுடைய காய்ந்த பகுதியானது நுனியிலிருந்து கீழ்நோக்கியும், ஓரங்களிலிருந்து நடு நரம்பை நோக்கியும் நெளிந்து அலை போன்று நீண்ட கோடுகளுடன் தனித்துக் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்திட, நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன் 20 சதவீத பசுஞ்சாணக் கரைசல் தெளிக்க வேண்டும். இதற்கு ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கி இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். மறுநாள் காலையில் அதனை வடிகட்டி பெறப்படும் தெளிந்த கரைசலுடன், மேலும் 100 லிட்டர் தண்ணீர் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு காலை நேரத்தில் தெளிக்க வேண்டும் அல்லது காப்பர் ஹைட்ராக்ஸைடு 500 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

**சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்க...**

உடல் ஆரோக்கியத்தில் சிறுதானியங்களின் பங்களிப்பு அதிகமுள்ளதால் வரும் காலத்தில் சிறுதானியங்களின் பயன்பாடு அதிகரிக்கும். இதையொட்டி, சிறுதானியங்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு பலனும் அதிக அளவில் இருக்கும் என வேளாண் துறையினர் கூறுகின்றனர். நாளுக்கு நாள் மக்களின் உடல் ஆரோக்கியம் கேள்விக் குறியாக உள்ளது. உண்ணும் உணவிலும் ரசாயனங்களின் கலவை உள்ளதால், 30 வயது முதலே மக்கள் நீரிழிவு, ரத்த அழுத்தம், புற்றுநோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு ஒரே தீர்வாக ஊட்டச் சத்து உணவு தேவை என்றால், அது சிறுதானிய உணவு வகை மட்டுமே. சிறுதானியங்களின் சிறப்பு: அரிசி, கோதுமை, மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, பணிவரகு, சாமை, வரகு, குதிரைவாலி ஆகியவை சிறு தானியங்கள் ஆகும். உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும் நுண் கிருமிகளின் வளர்ச்சியை சிறு தானியங்கள் தடுக்கின்றன; பெருங்குடலின் செயல்பாட்டை சீராக்குகின்றன; உடல்நலத்துக்கு ஏதுவான கிருமிகளின் வளர்ச்சியைத்

தூண்டுகின்றன; உடலின் சுறுசுறுப்புக்குக் காரணமான சொரட்டின் உற்பத்தியை அதிகரிக்கின்றன.

சிறுதானியங்களில் அதிக அளவில் காணப்படும் மெக்னீசியம், ஆஸ்துமாவையும் ஒற்றைத் தலைவலியையும் தடுக்கிறது. ரத்த அழுத்தத்தை சீராக்குவதால் இதய நோய்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கிறது. சிறுதானியங்களில் உள்ள நியாசின் (வைட்டமின் பி3) ரத்தத்தில் அதிக அளவில் கொழுப்பு சேர்வதைத் தடுக்கிறது.

தினமும் சிறுதானியங்களைப் பயன்படுத்துவேருக்கு நிரிழிவு நோய் வருவதில்லை.

இவற்றை அதிக அளவு உணவில் பயன்படுத்துவதால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த முடியும்.

ஊட்டச்சத்துக் குறைவால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் தடுக்கப்படுகின்றன. பெண்களுக்கு பித்தப்பையில் கற்கள் வருவதும் தடுக்கப்படுகிறது. அதிக அளவு நார்ச்சத்து உள்ள சிறுதானியங்கள் புற்றுநோயைத் தடுக்கின்றன.

உடல் பருமன் உள்ளவர்கள் சிறுதானியங்களைப் பயன்படுத்தும்போது உடல் எடை சீராகிறது. பைட்டோ கெமிக்கல், பைட்டிக் அமிலம் ஆகியவை சிறு தானியங்களில் காணப்படுவதால், அவற்றை உட்கொள்வோருக்கு நோய்கள் வராமல் தடுக்கின்றன. மேலும் எலும்பு வளர்ச்சிக்கும், உடலின் சராசரி ஆரோக்கியத்துக்கும் சிறு தானியங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

விவசாயிகளுக்கு விதை பெருக்குத் திட்டம்: தரமான சான்று பெற்ற நெல் மற்றும் சிறுதானியங்கள், பதிவு செய்யப்பட்ட விதைப் பண்ணை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து, அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதை மாற்று சதவீதத்தின்படி விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

எண்ணெய் வித்துக்கள், பயறு வகை, மக்காச்சோளம் ஒருங்கிணைந்த

திட்டம்: மக்காச்சோளம் பயிரின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும், சான்று விதை உற்பத்தி, விநியோகம் செயல்முறை விளக்கங்கள் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். மேலும் நீர் ஆதாரத்தில் இருந்து வயலுக்கு குழாய் மூலம் நீரைக் கொண்டு செல்லவும் பயிற்சி அளித்தல் போன்ற செயல்பாடுகள் இத்திட்டத்தில் உள்ளன.

சிறுதானிய விரைவுத் திட்ட அணுகுமுறை: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறுதானிய சாகுபடியை தமிழகத்தில் ஊக்குவித்தலுக்காக அரசுத் தரப்பில் பல கோடி செலவிடப்படுகிறது.

சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம், தினை, வரகு, சாமை, குதிரைவாலி ஆகிய சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க சிறுதானிய விரைவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் பல்வேறு இனங்களாக தொகுப்பு செயல் விளக்கம், விதை விநியோகம், மக்காச்சோளத்தில் துல்லியப் பண்ணையம், பருவ வாரியாக விவசாயிகளுக்குப் பயிற்சி, கருத்தரங்கு ஆகியவை பயிர் வாரியாக விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், அரியலூர், மதுரை, விருதுநகர், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, ஈரோடு, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் இணைய விருப்பமுள்ள விவசாயிகள், அந்தந்தப் பகுதி வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்துக்குச் சென்று அறிந்து கொள்ளலாம்.

### ஏரிகளை மேம்படுத்த புதிய தொழில்நுட்பம்

ஏரிகளை மேம்படுத்த உயிரித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம் என கர்நாடக மாநில அறிவு ஆணையம் மாநில அரசுக்கு பரிந்துரை வழங்கியுள்ளது.

கர்நாடக முதல்வர் சித்தராமையாவை புதன்கிழமை சந்தித்து, ஆணையத்தின் பரிந்துரைகளை அளித்த பின்னர், செய்தியாளர்களிடம் அதன் தலைவர் கஸ்தூரிரங்கன் கூறியது:

கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகள், பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை முதல்வர் சித்தராமையாவிடம் அளித்துள்ளேன். இந்த அறிக்கையில் மாநில அறிவு ஆணையம் செய்துள்ள பணிகள் குறித்தும் குறிப்பிட்டுள்ளேன். மைசூரில் காவிரி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது குறித்து தெரிவித்துள்ளேன்.

அறிவியல் அடிப்படையில் குழந்தைகளுக்கு பாடத் திட்டங்கள் வகுப்பது குறித்த ஆலோசனைகளும் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. மேலும், ஏரிகளை மேம்படுத்துவதற்கு உயிரித் தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வது குறித்தும் அறிக்கையில் உள்ளது. பெங்களூரில் உள்ள மடிவாளா ஏரியில் இதை சோதனை முயற்சியாக செயல்படுத்தலாம் என பரிந்துரை செய்துள்ளேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.22 கோடி செலவாகும். கர்நாடகத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் உயிரித் தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்த முடியும். மருத்துவத் துறையில் சீர்த்திருத்தம், ஆலோசனைகளை வழங்கியுள்ளேன். அறிவு ஆணையத்தின் செயல்பாடுகளை முதல்வர் சித்தராமையா வெகுவாகப் பாராட்டினார். சகிப்புத்தன்மை குறித்து நாட்டில் நடந்து வரும் விவாதங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்றார்.

### விவசாய மின் இணைப்பு: மின்வாரியம் அறிவுறுத்தல்

விழுப்புரம் மாவட்டத்தில் விவசாய மின் இணைப்புக்கு விண்ணப்பித்தவர்கள், தயார்நிலை குறித்து பதிவு செய்ய வேண்டும் என மின்வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து விழுப்புரம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் ரா.சீனிவாசன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தின்கீழ் இயங்கி வரும் விழுப்புரம், கண்டமங்கலம், செஞ்சி, திண்டிவனம் ஆகிய கோட்டங்களில், விவசாய

மின் இணைப்பு கோரி கடந்த 2000ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி வரை பதிவு செய்த அனைத்து விவசாயிகளுக்கும், கடந்த 2010ஆம் ஆண்டு தயார் நிலை நோட்டீஸ் வழங்கப்பட்டது. இதற்கான 5 வருட காலக்கெடுவும் முடியும் தருவாயில் உள்ளது.

இதனால், விண்ணப்பம் ரத்து செய்யப்படுவதை தடுக்க, இதுவரை தயார் நிலை பதிவு செய்யாத அனைத்து விவசாயிகளும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தை அணுகி உரிய விண்ணப்பம், வருவாய் ஆவணங்களை அளித்து காலநீட்டிப்புப் பெற்று, தயார்நிலையை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அதில் தெரிவித்துள்ளார்.

**சம்பா பருவத்துக்கு 8,800 மெ.டன் யூரியா இருப்பு: வேளாண் துறை தகவல்**

மாவட்டத்தில் சம்பா பருவத்துக்குத் தேவையான 8,800 மெ.டன் யூரியா இருப்பு உள்ளதாக வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் த.தனசேகரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நடப்பு சம்பா பருவத்தில் மாவட்டத்தில் நெல் 95 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிலும், கரும்பு 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பிலும், சிறுதானியங்கள் 25 ஆயிரம் ஹெக்டேர், பருத்தி 8 ஆயிரம் ஹெக்டேர், வரகு 2,500 ஹெக்டேர், மானாவாரி உளுந்து 7 ஆயிரம் ஹெக்டேர், காய்கறிப் பயிர்கள் 250 ஹெக்டேர் பரப்பிலும் பயிரிடப்பட்டுள்ளன.

சம்பா சாகுபடிக்குத் தேவையான ரசாயன உரங்கள் தொடர்ந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு இருப்பு வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நடப்பு பருவத்துக்குத் தேவையான தழைச்சத்து தரவல்ல யூரியா 8,800 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது. மணிச்சத்து தரவல்ல சூப்பர் பாஸ்பேட் 425 மெட்ரிக் டன், சாம்பல்சத்து தரவல்ல பொட்டாஷ் 2,155 மெட்ரிக் டன், டிஏபி 2,650 மெட்ரிக் டன், காம்ளக்ஸ் உரங்கள் 5,263 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

முக்கியமாக விவசாயிகள் பயிர்களுக்கு மண் பரிசோதனை அடிப்படையில் உரமிடுவது மிகவும் நல்லது. இதனால் உரச்செலவு குறைவதுடன், மண் வளமும் காக்கப்படுகிறது. விவசாயிகள் தழைச்சத்து அளிக்கக் கூடிய உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவினை விட அதிக அளவில் பயன்படுத்தினால் பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து பூச்சிநோய் தாக்குதலுக்குள்ளாகி மகசூல் குறைய வாய்ப்புள்ளது.

எனவே விவசாயிகள் உர விற்பனை நிலையங்களில் உரம் பெறும்பொழுது பட்டியல் கேட்டுப் பெறவும். மூட்டைகளில் அச்சிடப்பட்ட அரசு விலைக்கே உரங்களை பெற வேண்டும் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## இயற்கை உணவு பயிற்சிப் பட்டறை

உழவர்கரை நகராட்சி மகளிர் நுகர்வோர் அமைப்பு மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் துறை சார்பில் "இயற்கை உணவு' என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சிப் பட்டறை புதன்கிழமை நடத்தப்பட்டது.

அன்னை தெரசா செவிலியர் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு நுகர்வோர் அமைப்பு தலைவி திலகவதி தலைமை வகித்தார்.

குடிமைப்பொருள் வழங்கல் துறை இயக்குநர் பி.பிரியதர்ஷினி, சென்னை தொண்டு நிறுவன பொறுப்பாளர்கள் சந்தான ராஜன், தாமஸ், ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பயிற்சிப் பட்டறையை முன்னிட்டு நடத்தப்பட்ட இயற்கை உணவு கண்காட்சியில் கல்லுரி டீன் முரளி, உணவுப் பாதுகாப்பு அதிகாரி ரவிச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மண்வளத்தை பெருக்க "சணப்பு' சாகுபடி

மண் அரிப்பை தடுத்து மண்வளத்தை அதிகரிக்க சணப்பு பயிர் சாகுபடி செய்யலாம் என மேல்புறம் வேளாண்மை விரிவாக்க மையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மேல்புறம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மேல்புறம் வட்டாரத்தில் மேடு பள்ளமான நிலப்பரப்பில் வேளாண் சாகுபடி நடைபெற்று வருகிறது. மழைக் காலங்களில் மழைநீரால் வளமான மேல் மண் அரிக்கப்பட்டு நிலம் வளம் அற்றதாக மாறி பயிரின் வளர்ச்சியை கட்டுப்படுத்துகிறது. மழைநீரால் சாகுபடி பயிரை சுற்றி களைகள் வளர்ந்து அவை சாகுபடி பயிருடன் நீருக்காகவும், உரத்துக்காகவும் போட்டிபோட்டு பயிர் மகசூலை குறைக்கிறது. மழையை நம்பி சாகுபடி செய்யப்படும் மானாவாரி தென்னை பயிர், கோடையால் வறட்சியின் பிடியில் சிக்கி தவிக்கிறது. நீண்டகால பயிரான தென்னந் தோப்புகளில் மண் அரிப்பும், களை தொல்லையும், வறட்சியில் நீர் தேவையும் மிக அதிகம். இதனால் மகசூல் இழப்பும் அதிகம் ஏற்படுகிறது. இக் குறைகளை போக்க தென்னந்தோப்பில் ஊடுபயிராக சணப்பு பயிர் சாகுபடி செய்ய வேண்டும்.

காற்றில் உள்ள தழைச்சத்தை தனது வேர் முடிச்சுகளில் உள்ள நுண்ணுயிர்கள் மூலம் சேமிக்கும் திறன் கொண்ட சணப்பு பயிர் விதைத்த 45 நாள்களில் சுமார் 2 மீட்டர் உயரத்துக்கு வேகமாக வளர்ந்து ஏக்கருக்கு 4 முதல் 5 டன் தழை உரத்தையும் சுமார் 15 கிலோ தழைச்சத்தையும் தரும் தன்மை கொண்டது. சணப்பு பயிரின் ஆணி வேர்கள் மண்ணின் ஆழத்துக்கு ஊடுருவி, மற்ற பயிருடன் உரத்திற்காக போட்டியிடாது

வளரும் தன்மை கொண்டது. தென்னந்தோப்புகளில் வேறு மரத்தின் இலைத் தழைகளை இட்டால் அவை மக்குவதற்கு அதிக காலத்தை எடுத்துக் கொள்ளும். ஆனால் நன்கு வளர்ந்த சணப்பு பயிர் பூக்கும் முன் மண்ணுடன் உழுவதால் 5 முதல் 6 வாரத்துக்குள் நன்றாக மக்கி பயிருக்கு நல்ல உரமாக மாறிவிடும்.

சணப்பு பயிர் சாகுபடி செய்யப்பட்ட தென்னந்தோப்புகளில் மண் பிடிமானம் அதிகமாகி மேல் மண் அரிப்பு தடுக்கப்படும். வளமான மண் நஷ்டம் அடைவதில்லை. சணப்பு மிகவும் வேகமாக வளரும் தன்மை கொண்டதால் களைகள் ஏதும் வளராமல் களை வளர்ச்சியை கட்டுப்படுத்தி மகசூல் அதிகரிக்கச் செய்யும்.

ஒரு ஏக்கர் தென்னந்தோப்பில் 20 கிலோ சணப்பு விதை விதைக்க வேண்டும். சணப்பு விதைத்த விவசாயிகளுக்கு விதைக்கான விலையில் பாதி மானியமாக வழங்கப்படும். சணப்பு விதைக்கான மானியம் பெற மேல்புறம் வட்டார வேளாண்மை துறை அலுவலர்களை 04651 262263 என்ற அலுவலக தொலைபேசி எண்ணிலோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விலை வீழ்ச்சி, தொடர் மழை ரப்பர் விவசாயிகள், தொழிலாளர்களுக்கு பாதிப்பு

குமரி மாவட்டத்தில் தொடர் மழை மற்றும் விலை வீழ்ச்சி காரணமாக ரப்பர் விவசாயிகளுக்கும்,தொழிலாளர்களுக்கும் இரட்டைப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் ரப்பரின் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து கிலோ ரூ. 98 என்ற நிலையில் உள்ளது. இந் நேரத்தில் தொடர் மழையும் பெய்து வருவதால் ரப்பர் பால்வடிப்புத் தொழில் முடங்கியுள்ளது. இதனால் விவசாயிகளும், தொழிலாளர்களும் இரட்டைப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இது குறித்து குமரி மாவட்ட தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலர் வல்சகுமார் கூறியதாவது:

பொதுவாக தொடர் மழைக் காலங்களில் உற்பத்திக் குறைவால் விலை உயருவது வழக்கம். ஆனால் தற்போது இயல்புக்கு மாறாக விலை குறைந்து வருகிறது.

தொடர் மழையால் ரப்பர் பால்வடிப்பு முடங்கியுள்ளது. நிகழாண்டில் கடந்த ஏப்ரல் மாதம் ரப்பர் தோட்டங்களில் பால்வடிப்புத் தொடங்கப்பட்டது. ஏப்ரல் முதல் அக்டோபர் வரையுள்ள 7 மாதங்களில் சராசரியாக 170 நாள்கள் பால்வடிப்பு நடைபெற வேண்டும். ஆனால் நிகழாண்டு இயல்புக்கு மாறாக மழையின் காரணமாக 70 முதல் 100 நாள்களே பால்வடிப்பு நடந்துள்ளது.

தற்போது அரசு ரப்பர் கழகத்தில் மழைநாள்களில் பால் வடிப்பு தடைபட்டால் ரூ. 80 வீதம் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு மழைக்கால நிவாரணம் வழங்கப்படுகிறது. நிறுவனமாக செயல்படும் தனியார் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு ரூ. 100 வீதம் மழைக்கால நிவாரணம் வழங்கப்படுகிறது. ஆனால் பெரும்பான்மையாக உள்ள சிறு ரப்பர் தோட்ட விவசாயிகளுக்கு இது போன்ற மழைக்கால நிவாரணம் வழங்கப்படுவதில்லை.

இதனால் சிறு ரப்பர் தோட்ட விவசாயிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். தொடர் மழைக் காலங்களில் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றார் அவர்.

**விதை உற்பத்தியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி**

தூத்துக்குடியில் அரசு விதை உற்பத்தியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி நடைபெற்றது.

தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்காக வேளாண் விதைச்சான்று துறையின் சார்பில் தூத்துக்குடியில் உள்ள வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் அரசு விதை உற்பத்தியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள

புதுக்கோட்டை, சாத்தான்குளம், விளாத்திகுளம், புதூர், கோவில்பட்டி, கயத்தாறு, ஓட்டப்பிடாரம், உடன்குடி, செய்துங்கநல்லூர், ஸ்ரீவைகுண்டம், தென்திருப்பேரை, திருச்செந்தூர் ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த வேளாண் உதவி இயக்குநர்கள் மற்றும் உதவி விதை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு விதை உற்பத்தி குறித்த கையேடு வழங்கப்பட்டது

விதைச்சான்று உதவி இயக்குநர் பாரதி வரவேற்றார். வேளாண் இணை இயக்குநர் ஜெயகுமார் பயிற்சியினை தொடங்கிவைத்துப் பேசினார். விதை ஆய்வு துணை இயக்குநர் கிருஷ்ணகுமாரி, வேளாண் துணை இயக்குநர் (மாநில அரசு திட்டம்) கருப்பசாமி, திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர் அசோக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விதைச் சான்றளிப்பின் வழிமுறைகளைப் பற்றி விதைச்சான்று அலுவலர்கள் சிவகுமார், விக்னேஷ்வரி, கல்பனாதேவி மற்றும் ஊமைத்துரை ஆகியோர் பயிற்சி அளித்தனர். விதைப் பரிசோதனை முறைகளைப் பற்றி வேளாண் அலுவலர்கள் ரெனால்டா ரமணி மற்றும் நெடுஞ்செழியன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். விதைச் சட்ட அமலாக்கம், விதை விற்பனை உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் பற்றி விதை ஆய்வாளர் வெங்கட சுப்பிரமணியன் பயிற்சி அளித்தார்.

மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி நல்விதையினை உற்பத்தி செய்யுமாறு தூத்துக்குடி விதைச்சான்று உதவி இயக்குநர் பாரதி கேட்டுக்கொண்டுள்ளார்.

**தூத்துக்குடியில் நாளை மீனவர் குறைதீர் கூட்டம்**

தூத்துக்குடி மாவட்ட மீனவர்களுக்கான குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (நவ.6) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:இக்கூட்டம் வெள்ளிக்கிழமை ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள முத்து அரங்கத்தில் காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பதிவு செய்த சமூக ஆர்வலர்கள், ஊர்த் தலைவர்கள் அவர்கள் பதிவு செய்துகொண்ட பொருள் குறித்து பேச வாய்ப்பு வழங்கப்படும். மேலும், அந்தப் பொருள் மீதான கருத்துக்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அங்கேயே பெறப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார் அவர்.

**மழையால் நெல் விலை வீழ்ச்சி**

திருநெல்வேலி மாவட்டத்தில் அறுவடை பருவத்தில் பெய்த மழையால் நெல்லுக்கு போதிய விலை கிடைக்காமல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தாமிரவருணி பாசனத்தில் கார், பிசானம் ஆகிய இரு பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கார் பருவத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இப்பாசனத்தில் கோபாலசமுத்திரம், மேலச்செவல், அருகன்குளம், பாளையங்கோட்டை, மேலப்பாளையம், முக்கூடல் உள்பட பல்வேறு பகுதியில் தாமதமாக நடவு செய்ததால் அறுவடையும் தாமதம் ஆனது. இதனிடையே வடகிழக்குப்பருவ மழை தொடங்கியுள்ள நிலையில், கடந்த சில தினங்களாக மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருவதால் சுமார் 1,000 ஏக்கரில் நெல் பயிர் நீரில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளது.

மழையால் நெல்லுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகளுக்கு செலவு செய்த தொகை கூட கிடைக்கவில்லை. எனவே நிகழ் பருவத்தில் பெருமளவில் இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**சீமைக்கருவேல மரங்களை அகற்ற விவசாயிகள் கோரிக்கை**

பெரிய தாதம்பாளையம் ஏரியை ஆக்கிரமித்துள்ள சீமைக்கருவேல மரங்களை உடனே அகற்ற வேண்டும் என சீமைக்கருவேல ஒழிப்பு இயக்கம் சார்பில் விவசாயிகள் ஆட்சியரை திங்கள்கிழமை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது:

க. பரமத்தி ஒன்றியம், பவித்திரம் ஊராட்சியில் உள்ள பெரிய தாதம்பாளையம் ஏரி சுமார் 300 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரியை தற்போது சீமைக்கருவேல மரங்கள் ஆக்கிரமித்துள்ளன. நீரை அதிகளவில் உறிஞ்சும் இக்கருவேல மரங்களினால் சின்ன தாதம்பாளையம், கணபதிபாளையம், கொத்தம்பாளையம், பல்லமருதப்பட்டி, மலச்சிப்புதூர், கிலுவம்பாளையம், குளத்துப்பட்டி உள்ளிட்ட பகுதிகள் வறண்ட பாலைவனமாக மாறும் நிலை உள்ளது. மேலும், இதுகுறித்து மக்களவை உறுப்பினர், சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரிடமும் புகார் அளித்தும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இந்த சீமைக்கருவேல மரங்களை உடனே அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

**மழைத்தூவன் கருவி மூலம் விவசாயப் பணிகள்: ஆட்சியர் ஆய்வு**

காக்காவாடி ஊராட்சியில் மழைத்தூவன் கருவியை பயன்படுத்தி விவசாயப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், காக்காவாடி ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மானிய திட்டத்தில் மழைத்துவான் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, விவசாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்ட அவரிடம் அப்பகுதி விவசாயிகள் கூறியது:

மழைத்தூவன் கருவிகளை பயன்படுத்தி விவசாய பணிகளை மேற்கொள்ளும் போது திட்டமிட்டபடி பயிர்களுக்கு மட்டுமே தண்ணீர் செல்வதால் பயிர் நன்றாக வளர்வதுடன் தண்ணீர் சேதாரம் தவிர்க்கப்படுகிறது. அதுமட்டுமின்றி குறைந்த தண்ணீரில் அதிக பரப்பளவில் பயிரிட்டு அதிக மகசூலை பெற முடிகிறது. மேலும், கால்நடைகளுக்கு தேவையான தீவனங்களுக்கு தேவையான புல்வகைகளை குறைந்த நிலப்பரப்பில் பயிரிட்டு மழைத்துவான் கருவி

மூலம் தண்ணீர் பாய்ச்சும்போது நல்ல வளர்ச்சி பெறுகிறது. முன்பெல்லாம் குறைந்த அளவு தண்ணீர் இருந்ததால் 10 ஏக்கர் நிலப்பரப்பு வைத்திருந்தாலும் 6 முதல் 7 ஏக்கர் வரை மட்டுமே விவசாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் மழைத்துவன் மூலம் குறைந்த தண்ணீரில் அதிக விவசாயப் பணிகள் மேற்கொள்ள பயனுள்ளதாக இருப்பதால் தற்போது 3 மழைத்துவான் கருவிகள் பொருத்தப்பட்டு அனைத்து நிலப்பரப்பிலும் குறைந்த தண்ணீரை கொண்டு விவசாயப் பணிகளை முழுமையாக மேற்கொள்கிறோம் என்றனர்.

ஆய்வின்போது கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் பழனிவேல், உதவி இயக்குநர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தேசிய நெடுஞ்சாலையில் 40 ஆயிரம் மரக்கன்றுகள் நட இலக்கு : தேசிய நெடுஞ்சாலை 7-ல் வேலாயுதம்பாளையம் - ஆண்டிப்பட்டிக்கோட்டை கணவாய்மலை பகுதி வரை 40,000 மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம், மாநில நெடுஞ்சாலைத் துறை சார்பில் சாலைகளில் ஏற்கெனவே நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வரும் மரக்கன்றுகளை பார்வையிட்ட அவர் கூறியது:

கரூர் மாவட்டத்தில் மாநில நெடுஞ்சாலை 67 மூலம் மாயனூர் முதல் சுக்காலியூர் வரை 24 கி.மீ. தொலைவு சாலையின் இருபுறங்களில் கடந்தாண்டு 20,000 மரக்கன்றுகள் நடப்பட்டன. தற்போது இப்பகுதியில் 20,000 மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதேபோல் தேசிய நெடுஞ்சாலை-7-ல் வேலாயுதம்பாளையத்தில் இருந்து ஆண்டிப்பட்டிகோட்டை கணவாய்மலை பகுதி வரை 60 கி.மீ. தொலைவு சாலையின் இரு புறங்களிலிலும் 40,000 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு

பராமரிக்கப்பட்டு வருகிறது. இதே சாலையில் மேலும் 40,000 மரக்கன்றுகள் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு. அருணா, தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்ட இயக்குநர்கள் நாராயணன், ராஜு, மதுகான் திட்ட அலுவலர் பிரமோத் தாக்கூர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

கே.ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்துக்காக புதன்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது. தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தார்.

அரூர் வட்டம், கம்பைநல்லூர் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கே.ஈச்சம்பாடி அணை 146 மீட்டர் நீளமும், 5.20 மீட்டர் உயரமும் கொண்டது. இந்த அணையின் இடது மற்றும் வலதுபுறம் தலைமை மதகுகள் உள்ளன.

இந்த மதகுகளின் வழியாக வினாடிக்கு தலா 35 கன அடி தண்ணீரை எடுத்துச் செல்ல முடியும். வலதுபுறக் கால்வாய் 30.30 கிலோ மீட்டர் தூரமும், இடது புறக் கால்வாய் 26.15 கிலோ மீட்டர் தூரமும் கொண்டது. இந்த கால்வாய்கள் மூலம் 23 கிராமங்களில் உள்ள 6,250 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

நிகழாண்டியில், கே.ஈச்சம்பாடி அணைக்கட்டிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். முதல்வரின் உத்தரவின்படி, தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் பாசனத்துக்காக அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்தார்.

அப்போது அவர் கூறுகையில், கே.ஈச்சம்பாடி அணையில் இருந்து 120 தினங்களுக்கு முறைவைத்து தண்ணீர் திறந்து விடப்படும். இந்த அணையின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் அக்ரஹாரம், ஈச்சம்பாடி,

கெட்டுப்பட்டி, சாமண்டஹள்ளி, எலவடை, பாளையம், பள்ளிப்பட்டி, காட்டனூர், வெளாம்பட்டி சிங்கிரிப்பட்டி ஆகிய 10 கிராமங்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரியகுட்டகுளம், பச்சனாம்பட்டி, சொர்க்காப்பட்டி, வெள்ளாளப்பட்டி, வேலம்பட்டி, மேட்டுத்தங்கல், கொல்லப்பட்டி உள்ளிட்ட 21 கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

இந்த அணையின் இடது மற்றும் வலதுபுறக் கால்வாயில், ஒவ்வொரு கால்வாயிலும் இரண்டு மண்டலங்களாகப் பிரித்து தலா 5 நாள்கள் முறைவைத்து தண்ணீர் திறந்து விடப்படும். இந்த 2 கால்வாய்களிலும் தலா 35 கன அடி வீதம் அதிகபட்சமாக 120 தினங்கள் அல்லது தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் இருக்கும் வரையிலும் பாசனத்துக்கு திறந்து விடப்படும். எனவே, விவசாயிகள் பொதுப்பணித் துறையினருக்கு ஒத்துழைப்பு அளித்து, தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, விவசாய நிலங்களில் விளைச்சலை அதிகரிக்க வேண்டும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில், தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சங்கர், பாலக்கோடு சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன், மொரப்பூர் தொகுதி முன்னாள் எம்எல்ஏ கே.சிங்காரம், செயற்பொறியாளர் எஸ்.பாலசுப்பிரமணியன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் பூக்கடை எம்.முனுசாமி, லலிதா குப்புசாமி, அதிமுக ஒன்றியச் செயலர் ஆர்.பார்த்திபன், மாவட்டக் குழு உறுப்பினர் ஐ.கே.முருகன், நகரச் செயலர் கே.கே.தனபால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பு: பரிசல் சவாரி நிறுத்தம்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், பரிசல் சவாரி தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கர்நாடக நீர்ப் பிடிப்பு பகுதிகள் மற்றும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து, பிரதான அருவி, பெரியபாணி ஆகிய இடங்களில் வெள்ள நீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

ஒகேனக்கல்லில் செவ்வாய்க்கிழமை காலை வரை அருவிக்கு நொடிக்கு 10,000 கன அடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில், நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து, அன்று இரவு நொடிக்கு 15,000 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.

இந்த தண்ணீர், மேலும் அதிகரித்து புதன்கிழமை காலை ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நொடிக்கு 16,000 கன அடியாக அதிகரித்தது.

நீர்வரத்து குறித்து வருவாய்த் துறை மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஒகேனக்கல்லில் ஆய்வு செய்தனர்.

இதில், தொடர் மழை காரணமாக நீர்வரத்து மேலும் அதிகரிக்கக் கூடும் என்பதால், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி, ஒகேனக்கல் அருவியில் மாமரத்துக் கடவு மற்றும் ஊட்டமலை பகுதிகளில் தாற்காலிகமாக பரிசல் சவாரியை நிறுத்திவைக்க அறிவுறுத்தினர். இதனையடுத்து, பரிசல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

### திருவண்ணாமலையில் பலத்த மழை

திருவண்ணாமலையில் புதன்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இந்நிலையில், புதன்கிழமை மாலை 4.45 மணி முதல் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரமாக பெய்த பலத்த மழையால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் பெருக்கெடுத்தது.

திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையத்தில் மழைநீர் கழிவுநீருடன் சேர்ந்து குட்டை போல தேங்கியது. இதனால், பயணிகள் பெரிதும்

பாதிக்கப்பட்டனர். இதேபோல, வேங்கிக்கால், ஆட்சியர் அலுவலகம், கிரிவலப் பாதை, ஆடையூர், வட ஆண்டாப்பட்டு, அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மழை பெய்ததால் அப் பகுதி விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

செய்யாறில் அதிகபட்ச மழை: முன்னதாக, செவ்வாய்க்கிழமை மாலை முதல் புதன்கிழமை காலை வரை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக செய்யாறில் 25 மில்லி மீட்டர் மழை பெய்தது. இதுதவிர, ஆரணியில் 4.20, சாத்தனூர் அணையில் 8, வந்தவாசியில் 5, போளூரில் 2.60, திருவண்ணாமலையில் 1.60 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தண்டராம்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு வட்டாட்சியர் கு. ஏழுமலை தலைமை வகித்தார். சமூகப் பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் சா. தனஞ்செயன் வரவேற்றார். வட்ட வழங்கல் அலுவலர் மா.கோபால், துணை வட்டாட்சியர் கே. ஆசைத்தம்பி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது, விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

பண்டிகைக் காலம் நெருங்குவதால் நியாய விலைக் கடைகளில் அனைத்துப் பொருள்களையும் தங்கு தடையின்றி வழங்க வேண்டும், டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க கிராமங்கள்தோறும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும், கழிவு நீர்க் கால்வாய், பக்கக் கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும், விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை சார்பில் வழங்கப்படும் விதைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோரையாறு குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும், தரடாப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், ஏரிகளில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அழிக்க

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர். இதற்குப் பதிலளித்துப் பேசிய பல துறை சார்ந்த அலுவலர்கள் விவசாயிகளிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தனர்.

## இருபோக பகுதியில் நெல் கொள்முதல் நிலையம்: விவசாயிகள் ஆட்சியரிடம் வலியுறுத்தல்

பெரியாறு பாசனத் திட்டத்தில் முதல் போக சாகுபடியில், நெல் அறுவடை தொடங்க இருப்பதால் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பெரியாறு பாசனத் திட்டத்தில் இருபோக சாகுபடி பகுதியான பேரணை முதல் கள்ளந்திரி வரை ஏறத்தாழ 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இதில் மதுரை மாவட்டத்தில் மதுரை வடக்கு, கிழக்கு, வாடிப்பட்டி ஆகிய தாலுகாக்களில் நெல் விவசாயம் செய்யப்படுகிறது. இப் பகுதிகளில் முதல்போக சாகுபடி அடுத்த சில வாரங்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும் நிலை உள்ளது. இந்நிலையில், நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்குமாறு மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியனிடம் விவசாயிகள் மனு அளித்தனர். பெரியாறு பாசன விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் மன்னாடிமங்கலம் முருகன், குலமங்கலம் திருப்பதி உள்ளிட்டோர் ஆட்சியரிடம் கோரிக்கை மனுவை செவ்வாய்க்கிழமை அளித்தனர். மேலும் எங்களது இருபோக பகுதிக்கு இரண்டாம் போக சாகுபடிக்கு தரமான நெல் விதைகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

## வாழை இலை விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை

வத்தலகுண்டு வட்டார பகுதிகளில் வாழை இலை விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

வத்தலகுண்டு சுற்று வட்டாரம் பழைய வத்தலகுண்டு, உச்சபடி,சின்னுபட்டி, வெங்கடாஸ்திரி கோட்டை, விராலிபட்டி,

ரெங்கப்பநாயக்கன்பட்டி, குரும்பபட்டி உள்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாழை விவசாயம் அதிகளவில் செய்யப்படுகிறது.

இந்நிலையில் கடந்த சில மாதங்களாக 200 வாழை இலைகள் கொண்ட ஒரு கட்டு ரூ.240 முதல் 300 வரை விற்பனையானது. ஆனால் இப்போது ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனையாவதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

இது பற்றி விவசாயி சரவணன் கூறும்போது, ஒரு இலை ரூ.1க்கு விற்பனையானால் கூட பரவாயில்லை.

ஆனால் அடிமாட்டு விலைக்கு விற்பனையாவது வேதனை அளிக்கிறது.

தோட்டத்தில் இருந்து வாழை இலையை பறித்து கட்டுப் போட்டு, கமிஷன் கடைக்கு கொண்டு செல்வது வரை ஒரு கட்டுக்கு ரூ.120 வரை ஆகிறது என்றார்.

இது குறித்து மாநில விவசாயிகள் கூட்டமைப்பு பொதுச் செயலர் ஏஎம்எஸ்.இளங்கோவன் கூறும்போது, பொதுவாக வாழை இலை மருத்துவ குணம் உள்ளது. பெரும்பாலும் ஓட்டல்களில் சாப்பாடு போட வாழை இலைக்கு பதிலாக பிளாஸ்டிக் இலை, பேப்பர் போன்றவற்றையே பயன்படுத்துகிறனர். இது தடுக்கப்பட வேண்டும். மேலும் குளிரூட்டும் அறை அமைத்து விலை குறைவாக உள்ள நேரத்தில் பாதுகாக்க வழி செய்ய வேண்டும் என்றார்.

## நீர்நிலைகள் பாதுகாப்பு இயக்கம் தொடக்கம்

ராமநாதபுரம் நகரில் உள்ள நீர்நிலைகளை ஆக்கிரமித்து விடாமல் இருக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் நீர்நிலைகள் பாதுகாப்பு இயக்கம் புதன்கிழமை தொடங்கப்பட்டு புதிய நிர்வாகிகளும் தேர்வு செய்யப்பட்டனர்.

நீர்நிலைகள் பாதுகாப்பு இயக்கத்தின் நிர்வாகிகளில் தலைவராக க.நாகேசுவரன்(மனித நேய அறக்கட்டளையின் நிறுவனர்), சமூக ஆர்வலர் சு.சேதுபதி(துணைத் தலைவர்) ஆதித்திய சேக்கிழார்(செயலாளர்), கவிஞர்.மானுடப்பிரியன் (பொருளாளர்),

ஆர்.டி.ரகுநாதன்(பொதுச் செயலாளர்), மு.பி.செல்வம்(இணைச் செயலாளர்), எஸ்.யூசுப்அலி(அமைப்பாளர்) ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் மக்கள் நலன் கருதி நீர்நிலைகளை ஆக்கிரமிக்காமல் பாதுகாத்தல்,கிடாவெட்டி ஊரணி, வன்னார் ஊரணி, முகவை ஊரணி போன்ற ஊரணிகளில் கழிவுநீர், மனிதக் கழிவுகள், குப்பைகள் ஆகியவற்றைப் போடும் நபர்களை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரைப்பது எனவும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகரில் பல ஊரணிகளை தூர்வாரி சுத்தப்படுத்தியமைக்காக ஆட்சியருக்கு பாராட்டு தெரிவித்து சிறப்புத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இயக்க உறுப்பினர் செய்யது சேக்அப்துல்லா நன்றி கூறினார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## அறுசுவைக் கனி



எதை சாப்பிட்டாலும் அதன் சுவையை இது இனிப்பு, இது கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு என்று நமது நாக்கு உணர்ந்துவிடும். ஆனால் இந்த ஆறு சுவைகளும் ஒரே பொருளில் இருக்கிறது என்றால் நம்புவீர்களா?.

ஆமாம் நெல்லிக்காயில் மட்டுமே அறுசுவைகளும் உள்ளது என்கிறார்கள்

ஆய்வாளர்கள். நெல்லிக்கனியை எடுத்து கடித்தால் கசப்பதையும், துவர்ப்பதையும் எளிதாக உணர்ந்து கொள்ள முடியும். அதில் சிறிது உப்புத்தன்மையும், புளிப்புத்தன்மையும், கார்ப்பு சுவையும் மறைந்துள்ளது. நெல்லியை சுவைத்துவிட்டு தண்ணீர் குடித்தால் இனிப்பு சுவையை உணரலாம். இப்படி அறுசுவையும் கலந்த இயற்கையின் அதிசயக் கனியாக விளங்குகிறது நெல்லிக்கனி. ஏராளமான மருத்துவ குணங்களையும் கொண்டது இது.

**இந்திய சரணாலயங்கள்...**



இந்தியாவில் 92 தேசிய பூங்காக்களும், 500 சரணாலயங்களும் உள்ளன. அவற்றில் முக்கியமான சிலவற்றை தெரிந்து

கொள்ளலாம்... ஒற்றை கொம்பு காண்டாமிருகங்களுக்கான காசிரங்கா சரணாலயம் - அசாம்

ஆசிய சிங்களுக்கான கிர் தேசியப் பூங்கா - குஜராத்

புலிகளுக்கான களக்காடு சரணாலயம் - தமிழ்நாடு

காஷ்மீர் மான்களுக்கான டச்சிகாம் தேசியப்பூங்கா - காஷ்மீர்

யானைகளுக்கான பெரியார் தேசியப் பூங்கா - கேரளா

புலிகளுக்கான சுந்தரவன தேசிய பூங்கா - மேற்கு வங்காளம்

பறவைகளுக்கான ரங்கன்திட்டு சரணாலயம் - கர்நாடகா

தமின் மான்களுக்கான கெய்புல் லாம் ஜாவ் தேசிய பூங்கா - மணிப்பூர்

ராஜாஜி தேசிய பூங்கா - உத்திரகாண்ட்

பறவைகளுக்கான வேடந்தாங்கல் சரணாலயம் - தமிழ்நாடு

பந்திப்பூர் தேசிய பூங்கா - கர்நாடகா

நார்த் சிலி பால் (புலிகள் பூங்கா) - ஒரிஸா

காட்டெருமைகளுக்கான மானஸ் தேசிய பூங்கா - அசாம்

**கண்களை காத்திடுவோம்!**



நமது உடல் உறுப்புகளில் கண்கள் மிகவும் முக்கியமானவை. எனவே அவற்றை கவனமாகப் பாதுகாப்பது மிகவும் முக்கியம். கண்களைப் பாதுகாத்திடும் சில வழிமுறைகளை அறிந்திடுவோம்...கண்களின் அழகில் தூக்கத்துக்கு ஒரு முக்கிய இடம் இருக்கிறது. கண்களின் அழகைப் பராமரிக்க தினமும் எட்டு மணிநேரத் தூக்கம் அவசியம்அதோடு, கால்சியம், வைட்டமின்கள் நிறைந்த உணவை உட்கொள்ள வேண்டும். அதாவது பால், பால் உணவுகள், கீரை வகைகள், முட்டை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறப்பழங்கள், பச்சைக் காய்கறிகளை உட்கொள்ள வேண்டும்.நேரம் கிடைக்கும் போதெல்லாம் கண்களை, கடிகாரம் சுற்றும் முறையிலும், எதிர்முறையிலும் மூன்று முறை சுற்ற வேண்டும். மேலும் அருகில் உள்ள பொருட்களை பார்த்துவிட்டு தூரத்தில் உள்ள பொருட் களை பார்க்க வேண்டும். கட்டைவிரலை நடுவில் வைத்துக்கொண்டு அதனை இடமாகவும் வலமாகவும் விரலை மட்டும் நகர்த்தி தலையை திருப்பாமல் வெறும் பார்வையை மட்டும் திருப்பிப் பார்க்க வேண்டும். தினமும் இந்தப் பயிற்சியை தொடர்ந்து செய்தால் கண்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

நீண்ட நேரம் கணினி அல்லது தொலைக்காட்சியைப் பார்ப்பவர்கள் அடிக்கடி ஏதேனும் பச்சைவெளியைப் பார்க்கலாம் அல்லது கண்களுக்கு

குளிர்ச்சிதரும் நீல நிறங்களைப் பார்க்கலாம்.ஆரஞ்சுப் பழத்தை சாறாகப் பிழிந்து பிரிட்ஜில் வைத்து கட்டியான பின்னர் ஒரு துணியில் கட்டிக்கொண்டு கண்களுக்கு மேல் ஒத்தி எடுத்தால் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும்.கண்களை குளிர்ச்சியாக வைத்துக்கொள்கிறேன் என்று தரமற்ற குளிர் கண்ணாடிகளை வாங்கி அணிவதைத் தவிர்க்க வேண்டும். கண்ணில் சிறு பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிந்தாலும் உடனே கண் மருத்துவரை அணுகி பரிசோதிக்க வேண்டும்.இப்படியெல்லாம் கவனமாக இருந்தால் நமது விழி நமக்கு என்றும் வழி காட்டும்!

## காரமடை அருகே வாழை தோட்டத்தில் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம்



காரமடை

காரமடை அருகே வாழை தோட்டத்தில் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசத்தில் ஈடுபட்டன.

யானைகள் அட்டகாசம்

கோவை மாவட்டம் காரமடை அருகே உள்ள காளம்பாளையம் ஊராட்சி தாயனூரை சேர்ந்தவர் திருமூர்த்தி. இவர் தனக்கு சொந்தமான தோட்டத்தில் ஆயிரம் நேந்திரன் வாழைகளை பயிரிட்டு இருந்தார். நேற்று முன்தினம் இரவு 7 காட்டு யானைகள் கொண்ட கூட்டம் வாழை தோட்டத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்தது.தொடர்ந்து அந்த யானைகள் வாழை மரங்களை முறித்தும், தின்றும் சேதப்படுத்தியது. இதில் 400 வாழைகள் நாசமாயின. இதைத்தொடர்ந்து காட்டு யானைகள்

அருகே உள்ள ராஜேந்திரன் என்பவருக்கு சொந்தமான வாழை தோட்டத்தில் பயிரிட்டு இருந்த 300 வாழை மரங்களை சேதப்படுத்தியது.இதுபற்றி அறிந்ததும் அந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகளும், பொதுமக்கள் விரைந்து வந்தனர். பின்னர் அவர்கள் பட்டாசு வெடித்தும், ஒலி எழுப்பியும் யானைகளை விரட்டும் பணியில் ஈடுபட்டனர். அதன் பின்னர் யானைகள் வனப்பகுதிக்குள் சென்றன.

இழப்பீடு வேண்டும்

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், காட்டு யானைகள் அவ்வப்போது ஊருக்குள் புகுந்து விடுகின்றன. ஊருக்குள் வரும் யானைகள் விவசாயிகள் பயிரிட்டு உள்ள தோட்டங்களில் புகுந்து பயிர்களை நாசப்படுத்திச் செல்கின்றன. எனவே வனத்துறையினர் விவசாய தோட்டங்களில் புகுந்து வாழை மற்றும் பயிர்களை சேதப்படுத்தி வரும் யானைகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சேதமடைந்த வாழைகளுக்கு இழப்பீடு பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

## மழையால் ஏற்படும் பாதிப்புக்கு நிவாரணம் அதிகரிப்பு; உயிர் இழந்தோர் குடும்பத்துக்கு இழப்பீடு ரூ.4 லட்சமாக உயர்வு: முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை,

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் 28–ந் தேதி தொடங்கியது.

ஜெயலலிதா உத்தரவு

மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கனமழை பெய்து வருகிறது. அந்த மாவட்டத்தில் மழைக்கு இதுவரை 4 பேர் பலியாகி இருக்கிறார்கள். மேலும் சில மாவட்டங்களிலும் உயிர் இழப்புகள் ஏற்பட்டு உள்ளன.

பருவமழை காரணமாக ஏற்படும் உயிர் இழப்பு, கால்நடை இழப்பு, சேதம் அடைந்த குடிசைகள் போன்றவற்றுக்கான இழப்பீட்டு தொகையை உயர்த்தி முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

முன்எச்சரிக்கை நடவடிக்கைகள்

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளது. வரும் டிசம்பர் மாதம் வரை பருவமழை தொடர்ந்து நீடிக்கும். கனமழையை எதிர்கொள்ளும் வகையில் தேவையான முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க, நான், அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட கலெக்டர்களுக்கும், காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுக்கும் உத்தரவிட்டு உள்ளேன்.

அரசு நிர்வாகம் மேற்கொள்ளும் முன்எச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி, பருவமழையின் போது உயிர் இழப்புகள் மற்றும் சேதங்கள் ஏற்படக்கூடும். அவ்வாறு பருவ மழையால் பாதிக்கப்படுவோருக்கு உரிய நிவாரண உதவிகளை விரைந்து வழங்கவும் நான் உத்தரவிட்டு உள்ளேன்.

<u>இழப்பீட்டு தொகை உயர்வு</u>

பருவமழை காரணமாக ஏற்படும் உயிர் இழப்பு, கால்நடை இழப்பு, சேதம் அடைந்த குடிசைகளுக்கான இழப்பீட்டு தொகை ஆகியவற்றை உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டு உள்ளேன்.

அதன்படி, மழை காரணமாக உயிர் இழந்தோர் குடும்பத்திற்கு நிவாரண உதவியாக ரூ.4 லட்சம், முழுவதும் சேதம் அடைந்த நிரந்தர வீடு ஒன்றுக்கு ரூ.95 ஆயிரத்து 100, முழுவதும் சேதம் அடைந்த குடிசை வீடுகளுக்கு ரூ.5 ஆயிரம், பகுதி சேதம் அடைந்த குடிசை வீடுகளுக்கு ரூ.4 ஆயிரத்து 100 மற்றும் 10 கிலோ அரிசி, உடை மற்றும் 1 லிட்டர் மண் எண்ணெய், பசு மற்றும் எருமை மாடு உயிர் இழப்புக்கு ரூ.30 ஆயிரம், ஆடு, பன்றி உயிர் இழப்புக்கு ரூ.3 ஆயிரம், கோழி உயிர் இழப்புக்கு ரூ.100 என நிவாரண உதவித்தொகைகள் வழங்க நான் உத்தரவிட்டு உள்ளேன்.

<u>ஹெக்டேருக்கு ரூ.13 ஆயிரம்</u>

மேலும், வெள்ளம் காரணமாக நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்படும் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி, ஒரு புடவை, ஒரு வேட்டி, ஒரு லிட்டர் மண்எண்ணெய் ஆகியவற்றுடன் ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணம் வழங்கவும் நான் உத்தரவிட்டு உள்ளேன். முகாம்களில் அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் ஆகியவையும் வழங்கப்படும்.

மழையால் பாதிக்கப்படும் நெல் மற்றும் நீர்ப்பாசனம் பெறும் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13 ஆயிரத்து 500, மானாவாரி பயிருக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7 ஆயிரத்து 410, நீண்டகால

பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18 ஆயிரம் என்ற வீதத்தில் நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டு உள்ளேன்.

கட்டுமரம் சேதம்

முழுவதும் பாதிக்கப்படும் கட்டுமரம் ஒன்றுக்கு ரூ.32 ஆயிரம் வழங்கவும், பகுதி பாதிக்கப்பட்டு பழுது பார்க்கப்பட வேண்டிய கட்டுமரங்களுக்கு ரூ.10 ஆயிரம் வீதமும், முழுவதும் பாதிக்கப்படும் எப்.ஆர்.பி. வல்லம் ஆகியவற்றிற்கு 50 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில், அதிகபட்சம் ரூ.75 ஆயிரம் வரையிலும் வழங்கப்படும்.

சேதம் அடையும் எப்.ஆர்.பி. வல்லம் ஆகியவற்றுக்கு ரூ.20 ஆயிரம் என்ற வீதத்திலும், முழுமையாக சேதம் அடைந்த எந்திர படகுகளுக்கு 35 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில் அதிகபட்சம் ரூ.5 லட்சம் என்ற வீதத்திலும், பகுதி சேதம் அடையும் எந்திர படகுகளுக்கு பழுது பார்க்கும் செலவில் 60 சதவீதம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.3 லட்சம், கட்டுமரங்களுக்கான வலை சேதமடைந்தால் ரூ.10 ஆயிரம், படகுகளின் வெளிப்புறம் பொருத்தப்படும் எந்திரங்களுக்கு ரூ.5 ஆயிரம் என்ற வீதங்களில் நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டு உள்ளேன்.

பருவமழையினால் சாலைகள், பாலங்கள், இதர அரசு கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு சேதம் ஏற்பட்டால் அவற்றை சீரமைக்க உரிய கருத்துருக்களை உடனுக்குடன் அனுப்ப அரசு அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டு உள்ளேன்.இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறி உள்ளார்.

**தான்சானியா இறக்குமதி பருப்பின் விலை ரூ.130 ஆக குறைந்தது இந்திய பருப்பின் விலை படிப்படியாக குறைய வாய்ப்பு**



சென்னை,

விளைச்சல் மற்றும் வெளிமாநில வரத்து குறைவு, பதுக்கல் காரணமாக தமிழகத்தில் பருப்பின் விலை உச்சத்துக்கு சென்றது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.225 வரை சென்றது. விலை உயர்வை கட்டுப்படுத்த, மத்திய அரசு, 50 ஆயிரம் டன் துவரம் பருப்பை இறக்குமதி செய்ததோடு, பதுக்கல் மீதும் தீவிர நடவடிக்கை எடுத்தது.

தமிழக அரசும் 1–ந் தேதி முதல் கூட்டுறவு சங்க கடைகளில் ஒரு கிலோ பருப்பு 110 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறது. இதன்காரணமாக வெளிசந்தையில், தான்சானியா துவரம் பருப்பு விலை அதிரடியாக சரிந்துள்ளது. கடந்த வாரம், 100 கிலோ எடையுள்ள, ஒரு மூட்டை தான்சானியா பருப்பு, ரூ.14 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது. கிலோ, ரூ.160 முதல் ரூ.150 வரை விற்பனையானது.

தற்போது, ஒரு மூட்டை முதல் ரகம், 12 ஆயிரத்து, 500 ரூபாய், கிலோ ரூ.130 முதல் ரூ.140 வரை விற்பனையாகிறது. இரண்டாம் ரகம், கிலோ ரூ.115–க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேநேரத்தில் இந்திய பருப்பின் விலை கிலோவுக்கு ரூ.180 முதல் ரூ.190 வரை விற்பனையாகி வருகிறது.

தமிழக அரசின் முயற்சியின் காரணமாகவே தான்சானியா பருப்பின் விலை கிலோவுக்கு ரூ.30 வரை குறைந்துள்ளது என்றும், இந்தியப்பருப்பின் விலை டிசம்பர்–ஜனவரி மாத விளைச்சலுக்கு பிறகு

படிப்படியாக குறைய வாய்ப்புள்ளது என்றும் தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத்தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

## ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு 6,250 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்




தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 6,250 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

தண்ணீர் திறப்பு

தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள ஈச்சம்பாடி அணை ஆயக்கட்டு பகுதிகளை சேர்ந்த விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அரூர் தாலுகா ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி

அந்த அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நேற்று நடந்தது. கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ. மாவட்ட ஊராட்சி தலைவர் நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் கலந்துகொண்டு ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்து கால்வாயில் மலர் தூவினார். இதன் மூலம் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அக்ரகாரம், ஈச்சம்பாடி, கெட்டுப்பட்டி, எலவடை, பள்ளிப்பட்டி, காட்டனூர், சிக்கிரிப்பட்டி உள்ளிட்ட 10 கிராமங்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பெரிய குட்டக்குளம், கச்சனாம்பட்டி, வேலம்பட்டி, கிட்டம்பட்டி, காட்டம்பட்டி, வீரனக்குப்பம், கதிரம்பட்டி உள்ளிட்ட 31 கிராமங்கள் என மொத்தம் 41 கிராமங்களில் உள்ள 6,250 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

சிக்கனம்

இதைத்தொடர்ந்து அமைச்சர் பி.பழனியப்பன் பேசுகையில், இந்த அணையில் இருந்து 120 நாட்களுக்கு முறைவைத்து தண்ணீர் திறந்து விடப்படும். இடது மற்றும் வலது புறக்கால்வாயில் ஒவ்வொரு கால்வாயிலும் 2 மண்டலங்களாக பிரித்து முதல் மண்டலத்திற்கு 5 நாட்களும், 2-வது மண்டலத்திற்கு 5 நாட்களும் முறை வைத்து தண்ணீர் திறந்து விடப்படும். எனவே விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர், உதவி கலெக்டர் கவிதா, மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் பூக்கடை முனுசாமி, முன்னாள் எம்.எல்.ஏ. சிங்காரம், ஒன்றியக்குழு தலைவர் லலிதா குப்புசாமி,

கூட்டுறவு சர்க்கரை ஆலை துணைத்தலைவர் பார்த்திபன், முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் ராமச்சந்திரன், கூட்டுறவு வங்கி இயக்குனர் நல்லத்தம்பி, மாவட்ட கவுன்சிலர் முருகன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், உதவிசெயற்பொறியாளர் சரவணக்குமார், இளநிலை பொறியாளர் பாலாமணி, தாசில்தார் அதியமான் விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## மைசூரு மாவட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட 1,000 குவிண்டால் துவரம் பருப்பை ஏலம் விட கலெக்டர் உத்தரவு



மைசூரு,

மைசூரு மாவட்டத்தில் குடோன்கள், மளிகை கடைகளில் உணவுத்துறை அதிகாரிகள் கடந்த மாதம் அதிரடி சோதனை நடத்தி, அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த துவரம் பருப்பை பறிமுதல் செய்தனர். குறிப்பிட்ட அளவை விட அதிகமாகவும், அனுமதி இன்றியும் வைக்கப்பட்டு இருந்த துவரம் பருப்பு பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட 1,000 குவிண்டால் பருப்பை குறைந்த விலையில்

விற்பனை செய்ய முன்வரும் வியாபாரிகளுக்கு இணையதளம் மூலம் ஏலம் விட கலெக்டர் ஷிகா உத்தரவிட்டு உள்ளார்.

வியாபாரிகள் சட்டவிரோதமாக பருப்பை பதுக்கி வைத்து இருந்ததால் அதன் விலை 3 மடங்கு வரை உயருவதற்கு அவர்கள் காரணமாக இருந்ததாகவும், மேலும் அவர்களிடம் பருப்புக்கு உரிய ஆவணங்கள் இல்லாததாலும் அதை ஏலம் விடுவதற்கு கலெக்டர் உத்தரவு பிறப்பித்து உள்ளார்.

## அணைகளில் தண்ணீர் குறைந்ததால் மின் உற்பத்தி பாதிப்பு மந்திரி டி.கே.சிவக்குமார் தகவல் 4



பெங்களூரு,

அணைகளில் தண்ணீர் குறைந்ததால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக மந்திரி டி.கே.சிவக்குமார் கூறினார்.

200 மெகாவாட் மின்சாரம்

பெங்களூரு மின்வினியோக நிறுவனம்(பெஸ்காம்) எல்லைக்கு உட்பட்ட பகுதிகளை சேர்ந்த எம்.எல்.ஏ.க்களின் ஆலோசனை கூட்டம் பெங்களூரு விதான சவுதாவில் நேற்று நடைபெற்றது. இதில் மின்சார துறை மந்திரி டி.கே.சிவக்குமார் கலந்துகொண்டு பேசியதாவது:–

அணைகளில் தண்ணீர் குறைந்ததால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மின் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசின் தொகுப்பில் இருந்து 1,500 மெகாவாட் மின்சாரம் வழங்குமாறு கேட்டோம். ஆனால் வெறும் 200 மெகாவாட் மின்சாரம் தான் வழங்குகிறார்கள். வடகர்நாடகத்தில் இருந்து மின்சாரம் கொள்முதல் செய்யலாம் என்றால், அங்கிருந்து நமக்கு சரியான மின் வழிப்பாதை இல்லை. 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய டெண்டர் விடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு வெளி மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு தடை விதித்துள்ளது.

<u>பண பற்றாக்குறை இல்லை</u>

மின்சாரம் கொள்முதல் செய்ய பண பற்றாக்குறை எதுவும் இல்லை. பட்ஜெட்டில் ரூ.7 ஆயிரத்து 200 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மின்வெட்டு பிரச்சினை குறித்து அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை நடத்தி தீர்வு காணப்படும். மின்வெட்டு குறித்து எதிர்க்கட்சிகள் கூறும் விமர்சனங்களை பற்றி நான் கவலைப்படுவது இல்லை.

புதிதாக மின் உற்பத்தி நிலையங்களை தொடங்க மங்களூரு, ஹாசன் ஆகிய மாவட்டங்களில் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. தற்போது சர்க்கரை ஆலைகளில் அரவை பணிகள் தொடங்குவதால் மின் பிரச்சினை தீரும். மாநிலத்தில் 6 கோடி மின் விளக்குகளை அகற்றிவிட்டு எல்.இ.டி. பல்புகள் பொருத்தப்படும். மாநிலத்தில் 10 ஆயிரம் ‘லைன்மேன்’கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 10 ஆயிரம் லைன்மேன்களை நியமனம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு டி.கே.சிவக்குமார் பேசினார்.

<u>கோடை காலத்தில்...</u>

மின்துறை உயர் அதிகாரி ரவிக்குமார் பேசுகையில், “கோடை காலத்தில் மின்சார பிரச்சினையை சமாளிக்கும் வகையில் தற்போது நீர்மின் உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கோடை காலத்தில் ஏற்படும் மின் பிரச்சினையை சமாளிக்க முடியும்“ என்றார்.

## சூறை காற்றுடன் பலத்த மழை; வாழை மரங்கள் சேதம்



நெட்டப்பாக்கம் பகுதியில் சூறை காற்றுடன் பெய்த பலத்த மழையால் வாழை மரங்கள் சேதமடைந்தன.

வாழை மரங்கள் சேதம்

தமிழகம், புதுச்சேரியில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. புதுவை மாநிலம் நெட்டப்பாக்கம், திருக்கனூர் பகுதியில் கடந்த சில நாட்களாக விட்டு விட்டு மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் நெட்டப்பாக்கம் பகுதியில் நேற்று முன்தினம் சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதில் பண்டகசோழநல்லூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி பாண்டுரங்கன் என்பவரின் தோட்டத்தில் வாழை மரங்கள் சாய்ந்து சேதமடைந்தது. மேலும் அப்பகுதியில் பல ஏக்கர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நோய் பரவும் அபாயம்

மேலும் நெட்டப்பாக்கம், பனையடிக்குப்பம், கரையாம்புத்தூர், மணமேடு ஆகிய கிராமங்களில் தாழ்வான பகுதியில் மழைநீர் தேங்கியுள்ளது. இதை அப்புறப்படுத்த பொதுப்பணித்துறை பொறியாளருக்கு கிராம மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். தேங்கியுள்ள தண்ணீரால் டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளது என்றும்

எனவே சுகாதாரத்துறை மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக ஓசூரில் 51 மில்லி மீட்டர் பதிவு விவசாயிகள் மகிழ்ச்சி



மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்துள்ளது. இதில் அதிகபட்சமாக ஓசூரில் 51 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. பரவலாக மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சில இடங்களில் நேற்று முன்தினம் மாலை பரவலாக நல்ல மழை பெய்தது. இந்த மழை இரவு முழுவதும் நீடித்தது. குறிப்பாக ஓசூர் நகர சாலைகளில் மழைநீர் வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடியது. அத்துடன் சாக்கடை கால்வாயில் பெருக்கெடுத்து ஓடிய மழை நீர், சாலையில் சென்றது. இதனால் பெரும்பாலான பகுதியில் துர்நாற்றம் வீசியது.

மேலும் இந்த மழையால் மார்க்கெட் சாலை, சப்-ஜெயில்ரோடு, சேலம் சாலை ஆகிய சாலையோரங்களில் ஓரங்களில் கடை வைப்பவர்கள் தங்களது கடைகளில் வியாபாரம் செய்ய முடியாமல் தவித்தனர். இருசக்கர வாகன ஓட்டிகள் சாலையில் வாகனங்களை ஓட்ட முடியாமல் ஆங்காங்கே நிறுத்திவிட்டு நீண்ட நேரம் காத்திருந்தனர். குறிப்பாக தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் மழையால் கிருஷ்ணகிரி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

மகிழ்ச்சி

இந்த மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று காலை 8 மணி நிலவரப்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகபட்சமாக ஓசூரில் 51 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. கிருஷ்ணகிரி - 10.2, சூளகிரி -45, ஊத்தங்கரை -20, தேன்கனிக்கோட்டை -15, அஞ்செட்டி -3, போச்சம்பள்ளி -4.2, ராயக்கோட்டை -10, பெனுகொண்டாபுரம் -5.2, நெடுங்கல் -2.4 மொத்தம் 166 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி



வாடிப்பட்டி அருகே கட்டக்குளத்தில் மதுரை வேளாண்மைக் கல்லூரியின் 4-ம் ஆண்டு கிராம தங்கல் வேளாண்மை பணி அனுபவத்திட்ட மாணவிகள் விவசாயிகளுக்கு அசோலா பற்றிய செயல் விளக்க பயிற்சி நடத்தினர். இந்த முகாமிற்கு பெரியாறு பாசன விவசாயிகள் சங்க செயலாளர் ராமசாமி தலைமை தாங்கினார். இதில் அசோலா வளர்ப்பு பற்றி மாணவி கல்பனா செயல் விளக்கம் செய்து அதன் பயன்பாடு பற்றி எடுத்துக் கூறினார். அவர் கூறுகையில், அசோலா ஒரு வகை நீல பசும்பாசி. இது காற்றில் உள்ள நைட்ரஜனை பிடித்து மண்ணில் சேமித்து பயிரின் வேர்களுக்கு கிடைக்க செய்கிறது. நெல் வயலில் பயன்படுத்தும் போது களைச்செடிகளை வளர விடாமல் செய்கிறது. இதனால் களை மேலாண்மைக்கு செலவிடும் செலவு குறைகிறது. மேலும் இதை கால் நடைகளுக்கு தீவனமாக

பயன்படுத்தலாம் என்று விளக்கி கூறினார். இதில் மாணவிகள் பாக்கியலெட்சுமி, பிரதீபா, மோனிகா, ஷாத்திகா, வைத்தீஸ்வரி மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## அறந்தாங்கி பகுதியில் தொடர்மழை: மரக்கன்றுகளை வாங்கிச் சென்ற பொதுமக்கள்



அறந்தாங்கி பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், தங்களின் நிலங்களில் நடுவதற்காக பொதுமக்கள் ஆர்வத்துடன் மரக்கன்றுகளை வாங்கி சென்றனர்.

தொடர் மழை

அறந்தாங்கி பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக பல இடங்களில் மற்றும் குளம், குட்டைகளில் தண்ணீர் தேங்கி உள்ளது. நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளதாலும், பூமியில் மரக்கன்று நடுவதற்கான தட்பவெப்ப நிலை உள்ளதாலும், பொதுமக்கள் தங்கள் வீடுகளில், காலியாக உள்ள நிலங்களில் மரக்கன்றுகள், அலங்காரச் செடிகள் போன்றவற்றை நடவு செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து பொதுமக்கள் அறந்தாங்கியில் அரிமளத்தை அடுத்த கல்லுக்குடியிப்பு, கறம்பக்குடியை அடுத்த மழையூர் போன்ற பகுதிகளில்

இருந்து வியாபாரிகள் கொண்டு வந்துள்ள பலா, மா, கொய்யா, சப்போட்டா, சந்தனம், கோங்கு, தேக்கு, வாழை உள்ளிட்ட மரக்கன்றுகளையும், ரோஜா, செம்பருத்தி போன்று மலர் செடிகளையும், குரோட்டன்ஸ் போன்ற செடிகளை ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

பொதுமக்கள் நம்பிக்கை

கல்லுக்குடியிருப்பு, மழையூர் போன்ற பகுதிகளில் இருந்து தரமானதாகவும், விலை குறைவாகவும் உள்ள மரக்கன்றுகள் அறந்தாங்கியில் விற்பனை செய்யப்படுவதால், பொதுமக்கள் செடிகளை நம்பிக்கையுடன் வாங்கிச் செல்கின்றனர். தற்போது பொதுமக்களுக்கு மரக்கன்று நடுவதற்கு ஏற்பட்டுள்ள ஆர்வம் காரணமாக ஆயிரக்கணக்கான செடிகள் மற்றும் மரக்கன்றுகள் விற்பனையாகிறது.

அதேப்போல தற்போது மழைக்காலம் என்பதால், வழக்கத்தை விட பல மடங்கு மரக்கன்றுகள் விற்பனை ஆனதால், மரக்கன்றுகளை விற்பனைக்காக கொண்டு வந்த வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினகரன்

**புதிய காற்று சுழற்சி காரணமாக தமிழகத்தில் மழை தொடரும்**




சென்னை : தென் கிழக்கு வங்கக் கடலில் புதியதாக காற்று சுழற்சி உருவாகியுள்ளதால் தமிழகம், புதுச்சேரியில் மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வளி மண்டல மேல் அடுக்கில் கடந்த வாரம் உருவான காற்று சுழற்சி வட மேற்கு திசையில் நகர்ந்து சென்றதை அடுத்து தமிழகத்தில் வடக்கு மற்றும் வட மேற்கு திசையில் அதிக அளவில் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று உத்தரமேரூர், தாமரைப்பாக்கம், · பெரும்புதூர் 90 மிமீ மழை பெய்துள்ளது. பூண்டி 70 மிமீ, வேலூர், பாளையங்கோட்டை, நாங்குனேரி, திருவாலங்காடு 60 மிமீ, குளித்தலை, திருக்கோவிலூர், கரூர், காவேரிப்பாக்கம், சூளகிரி 50 மிமீ, ஆம்பூர், மணலூர், குன்னூர், பூந்தமல்லி, தர்மபுரி, கொள்ளிடம் 40 மிமீ, வாடிப்பட்டி, வேடச்சந்தூர், சோழவரம், தூத்துக்குடி, அரக்கோணம், கோவை, பொள்ளாச்சி, செய்யார் 30 மிமீ, செங்குன்றம், கொடைக்கானல், உதகமண்டலம், சிவகங்கை, திண்டுக்கல், சோளிங்கர், திருவள்ளூர், திருச்சி, திருப்புவனம் 20 மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், தென் கிழக்கு வங்கக் கடல் பகுதியில் இலங்கையை ஒட்டிய கடல் பகுதியில் வளி மண்டல மேல்

அடுக்கில் புதிய காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இது வட மேற்கு திசையில் நகர்ந்து தமிழக கடலோரத்துக்கு வரும் வாய்ப்புள்ளதால். தமிழகம் புதுச்சேரி கடலோரப் பகுதியில் இன்று கனமழை பெய்யும். இது தவிர வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பூர், கோடை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் மிதமானது முதல் கனமழை வரை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரில் சில இடங்களில் மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

**உரங்களை இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம்**

திருச்சி, : நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான உரங்களை முன்னதாகவே இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வினியோகிக்க வேண்டும் என ேவளாண் இணை இயக்குனர் தொிவித்துள்ளார். திருச்சி மாவட்ட வேளாண் இடுபொருள் விற்பனையாளர்களுக்கான புத்தூட்டப்பயிற்சி திருச்சி வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் தலைமையில் வேளாண்மை இணை இயக்குனரக அட்மா கூட்டரங்கில் நடைபெற்றது. பயிற்சியை துவக்கிவைத்த வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் பேசுகையில், நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான உரங்களை முன்னதாகவே இருப்புவைத்து விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும். வேளாண்மைத் துறையின் மூலம் AGRISNET இணையதளம் செயல்படுத்தப்படுகிறது. இதில் மாவட்டத்தில் உள்ள அனைத்து உர விற்பனையாளர்களும் தங்களது உர உாிம விபரங்களை பதிவுசெய்து பின்னர் வாரம் தவறாது உர இருப்பு விபரங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றார். வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) பால்ராஜ் உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985, உர விற்பனை நிலையங்களில் பராமாிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் பற்றி பயிற்சியளித்தார். பயிற்சியில் திருச்சி மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலிருந்தும் உர விற்பனையாளர்களும், உர நிறுவன விற்பனை பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். மேலும்

பயிற்சியில் புவியிட காணல் முறையில் மண்மாதிாி சேகாித்தல், மண் ஆய்வின் முடிவின்படி பயிர்களுக்கு உர பாிந்துரை செய்தல், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், பசுந்தாள் உர பயிர்களின் சாகுபடி மற்றும் அவற்றால் மண்ணில் ஏற்படும் பயன்தரும் மாற்றங்கள் பற்றி "வேளாண்மை அலுவலர்(தரக்கட்டுப்பாடு), வேளாண்மை அலுவலர்(மண் ஆய்வுக்கூடம்) ஆகியோரால் விாிவாக எடுத்துரைக்கப்பட்டது.

**தண்ணீர் தராததால் பாதிக்கப்பட்ட தமிழக விவசாயிகளுக்கு ரூ.10 ஆயிரம் கோடி இழப்பீடு**

திருச்சி, : சம்பா சாகுபடிக்குத் தேவையான தண்ணீர் தரப்படாததால் பாதிக்கப்படும் தமிழக விவசாயிகளுக்கு ரூ.10 ஆயிரம் கோடி இழப்பீட்டுத் தொகையை கர்நாடகா அரசு வழங்க வேண்டும் என தமாகா விவசாய அணி மாநிலத் தலைவர் புலியூர் நாகராஜன் கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காவிாி நடுவர் மன்றத் தீர்ப்பின் படி செப்டம்பர் மாதம் முடிய தமிழகத்துக்குத் தர வேண்டிய தண்ணீரில் 46 டிஎம்சி தண்ணீரை கர்நாடகா அரசு இன்னும் தரவில்லை. இதனால் தமிழக விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, இனியும் காலம் தாழ்த்தாமல் காவிாியில் தண்ணீர் திறந்து விட மத்திய அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிாி நீர்ப்பிடிப்பு பகுதியில் இயல்பான மழை பொழிவு உள்ள காலங்களில் 425 டிஎம்சி கர்நாடகத்துக்கு கிடைக்கும். இதில் 192 டிஎம்சி தண்ணீர் தமிழகத்துக்கு தர வேண்டும். அதாவது, மொத்த நீர் இருப்பில் 45 சதவீதம் தண்ணீர் தர வேண்டும் என்பது காவிாி நடுவர் மன்றத் தீர்ப்பாகும். மொத்த மழை அளவை கணக்கீட்டு அதில் 45 சதவீதம் தண்ணீர் விட வேண்டும் என்பதை மத்திய அரசு காவிாி கண்காணிப்பு குழு உறுதி செய்ய வேண்டும். மேலும், தமிழகத்தின் 20 மாவட்டங்களை சேர்ந்த 5 கோடி மக்களின் குடிநீர் வழங்கும் நீர் ஆதாரமாக விளங்குகிறது.

சென்னை உள்ளிட்ட 20 மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக காவிாியில் 100க்கும் மேற்பட்ட இடங்களில் ( மேட்டூர் முதல் பூம்புகார் வரை) ராட்சத ஆழ்குழாய் அமைத்து காவிாி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. காவிாியில் தண்ணீல் வராவிட்டால் 15 லட்சம் ஏக்காில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிர்கள் காய்ந்து கருகி விடும். இதனால் தமிழக விவசாயிகளுக்கு ரூ. 10 ஆயிரம் கோடி அளவுக்கு ஏற்படும் இழப்பை கர்நாடகா அரசு வழங்க வேண்டும். மேலும், 20 மாவட்டங்களை சேர்ந்த 5 கோடி மக்களின் குடிநீர் தேவையும் பூர்த்த செய்ய முடியாத அபாய நிலை ஏற்படும் என்றார்.

**நெற்பயிர்களின் வளர்ச்சி ஊக்குவிக்க ஆலோசனை**

நீடாமங்கலம், : நெல்வயல்களில் பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், பூச்சிநோய்களிலிருந்து பயிர்களை பாதுகாக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் முனைவர் பாஸ்கரன், பூச்சியியல் உதவி பேராசிரியர் ராஜாரமேஷ் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது ஆங்காங்கே பருவ மழை பெய்து வருகிறது. இந்த சூழ்நிலையில் நெற்பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், எதிர்பார்க்கும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலிலிருந்து நெற்பயிரைக் காக்கவும் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்ற வடிகால் வசதியை உடனடியாக ஏற்படுத்தி வயல்களில் தண்ணீர் தேங்காவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். இளம் நெற்பயிர்கள் கரைந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. அவ்வாறான சமயங்களில் மீண்டும் நடவு செய்ய வேண்டும். சற்று வயதான நெல் பயிராக இருந்தால் வயலில் அதிகதூர்கள் இருக்கும் குத்திலிருந்து சில தூர்களை பிடுங்கி கரைந்துபோன இடங்களில் நட்டு பயிர்

எண்ணிக்கையை சரியாக பராமரிக்க வேண்டும். ஊட்டச்சத்து குறைபாடுகளை சரி செய்ய தண்ணீரால் மூழ்கிய பயிர்களில் தழைச்சத்து குறைபாட்டை போக்குவதற்கு மழையில்லாத சமயங்களில் ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம்புண்ணாக்கு இவற்றை கலந்து ஓர் இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள் காலை இதனுடன் 17 கிலோ பொட்டாஷ் உரத்தையும் கலந்து தெளிக்க வேண்டும். இலை வழி உரமாக அளிக்க வேண்டுமெனில் 2 கிலோ யூரியாவுடன் 1 கிலோ சிங் சல்பேட்டை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். அல்லது 4 கிலோ டி.ஏ.பியினை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து ஓர் இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள காலை வடித்து தெளிந்த நீருடன் 2 கிலோ பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து 190 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சி அல்லது நோய் தக்ககுலை கட்டுப்படுத்த தற்போது நிலவும் மந்தமான சீதோஷ்ணநிலையில் இலைச்சுருட்டுப்புழு குருத்து ஈ மற்றும் புகையான ஆனைக்கொம்பன் ஈ போன்ற பூச்சிகளில் தாக்குதல் மற்றும் கலை நோய் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

தின பூமி

**மலிவு விலை துவரம் பருப்பு விற்பனை நிலையங்களில் செல்லூர் ராஜூ ஆய்வு**

சென்னை: முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆணைக்கிணங்க மலிவு விலை துவரம் பருப்பு விற்பனை குறித்து சென்னையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ ஆய்வு நடத்தினார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு

வெளிச்சந்தையில் துவரம் பருப்பு விலை உயர்ந்ததை கட்டுப்படுத்தும் வகையில், முதலமைச்சர் ஜெயலலிதா, பொதுமக்களின் நலன் கருதி

போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, கடந்த 1ம்தேதி முதல் ஒரு கிலோ துவரம்பருப்பு ரூ.110க்கும் அரை கிலோ துவரம்பருப்பு ரூ.55க்கும் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் 71 கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் செயல்பாட்டினை, காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலையின் நந்தப்பக்கம் விற்பனை நிலையத்தை கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூ நேற்று நேரில் ஆய்வு செய்தார். அப்போது, அங்கு கூடியிருந்த பொதுமக்களின் கருத்தினை கேட்டறிந்தார். அதையடுத்து, வருகிற தீபாவளி பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்குண்டான பொருள்கள் அனைத்தும் போதுமான அளவு இருப்பு வைத்து, எவ்வித புகாருக்கு இடமின்றி, எப்போது கேட்டாலும் பொருள்கள் வழங்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்ட இந்த சீரிய நடவடிக்கையின் காரணமாக, வெளிச்சந்தையில் விலை உயர்ந்து இருந்த துவரம்பருப்பின் விலை, தற்போது, பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டு, முதல் ரக துவரம்பருப்பு ரூ.140க்கும், இரண்டாம் ரக துவரம்பருப்பு ரூ.120க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தமிழக மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த பெருமை முழுவதும் முதலமைச்சர் ஜெயலலிதாவையே அவர்கள் சாரும்.

முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக மக்களின் மீது அன்பும், அக்கறையும் கொண்டவர்கள். பொதுமக்கள் எந்த நிலையிலும், எந்த ஒரு அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தாலும் பாதிக்கக்கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு, மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தீர்க்க தரிசனத்தோடு, ரூ.100 கோடியில் விலை கட்டுப்படுத்தும் நிதியம் ஒன்றை உருவாக்கினார்.இந்த நிதியின் மூலம், எப்போதெல்லாம் வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின்

விலை உயருகிறதோ, அப்போதெல்லாம் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் வழங்கி வருகிறார்கள். குறிப்பாக, புளி, மிளகாய் வத்தல், அரிசி ஆகிய அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்தபோதெல்லாம் இந்த நிதியை பயன்படுத்தி, குறைந்த விலையில் இப்பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கிவருகிறார்கள்.

இதுமட்டும் அல்ல, இடைத்தரகரின்றி, பொதுமக்களும், விவசாயிகளும் பயன்பெரும் வகையில், பண்ணை பசுமை நுகர்வோர் காய்கறி கடைகள், 15 சதவிகிதம் தள்ளுபடி விலையில் தரமான மருந்துகள் பெற அம்மா மருந்தகங்கள், அதேபோன்று, அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட், அம்மா உப்பு, அம்மா உணவகம் என பல்வேறு மகத்தான திட்டங்களை தமிழக மக்களுக்கு தந்து விலைவாசிகளை கட்டுப்படுத்தி வரலாற்று சாதனைகளை படைத்துள்ளார்.. ஆனால், கருணாநிதி ஆட்சியில், அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தபோது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பொதுமக்களை கேலியும் கிண்டலுமாக பேசியது யாவரும் அறிந்ததே. கருணாநிதியின் ஆட்சியின் செயலற்ற நிர்வாகத்தினால் தமிழக மக்கள் பெரிதும் துன்பப்பட்டு வந்தனர். இந்நிலையில், மக்களால் நான் மக்களுக்காகவே நான் என்ற உயரிய இலட்சியத்தோடு, தமிழக மக்களின் நலனே என் நலன் என்ற குறிக்கோளோடு அயராது உழைத்து வரும் முதல்வர் ஜெயலலிதாவை இன்று தமிழகமே போற்றுகிறது. என்று அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.இந்த ஆய்வின்போது, காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தலைவர் .எம்.கூத்தன், நிர்வாகஇயக்குநர்.ஏ.ஜி.சந்திரசேகர் மற்றும் பொது விநியோகத் திட்ட இணைப்பதிவாளர் ஐஐ தேன்மொழி ஆகியோர் உடனிருந்தனர்.

**பருவமழை காரணமாக உயிரிழந்த குடும்பங்களுக்கு நிவாரணம் ரூ.4 லட்சமாக உயர்வு முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**



சென்னை: பருவமழை காரணமாக உயிரிழந்தவர் குடும்பத்துக்கு நிவாரண உதவியை 4 லட்சம் ரூபாயாக உயர்த்தி முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இது குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கடந்த சில நாட்களாக தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. எதிர் வரும் டிசம்பர் மாதம் முடிய பருவமழை தொடர்ந்து நீடிக்கும். கன மழையை எதிர்கொள்ளும் வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க நான் அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட கலெக்டர்களுக்கும், காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளேன்.

அரசு நிர்வாகம் மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி, பருவமழையின் போது உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் ஏற்படக்கூடும். அவ்வாறு பருவ மழையால் பாதிக்கப்படுவோருக்கு உரிய நிவாரண உதவிகளை விரைந்து வழங்கவும் நான் உத்தரவிட்டுளேன்.

பருவமழை காரணமாக ஏற்படும் உயிரிழப்பு, கால்நடை இழப்பு, சேதமடைந்த குடிசைகளுக்கான இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றை உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். அதன்படி, மழை

காரணமாக உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிவாரண உதவியாக 4 லட்சம் ரூபாய்; முழுவதும் சேதமடைந்த நிரந்தர வீடு ஒன்றுக்கு 95,100 ரூபாய்; முழுவதும் சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு 5,000 ரூபாய்; பகுதி சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு 4,100 ரூபாய்; மற்றும் 10 கிலோ அரிசி, உடை மற்றும் 1 லிட்டர் மண்எண்ணை; மாடு இறந்தால் ரூ.30 ஆயிரம் பசு மற்றும் எருமை மாடு உயிரிழப்புக்கு 30 ஆயிரம் ரூபாய்; ஆடு, பன்றி உயிரிழப்புக்கு 3 ஆயிரம் ரூபாய்; கோழி உயிரிழப்புக்கு 100 ரூபாய்; என நிவாரண உதவித் தொகைகள் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், வெள்ளம் காரணமாக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படும் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி, ஒரு புடவை, ஒரு வேட்டி, ஒரு லிட்டர் மண்எண்ணை ஆகியவற்றுடன் 1,000 ரூபாய் ரொக்கப்பணம் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். முகாம்களில் அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் ஆகியவையும் வழங்கப்படும்.

நெற்பயிர்களுக்கு ரூ.13,500 மழையால் பாதிக்கப்படும் நெல் மற்றும் நீர்ப்பாசனம் பெறும் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாய்; மானாவாரி பயிருக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 7 ஆயிரத்து 410 ரூபாய்; நீண்டகால பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 18 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டுளேன்.

படகுகளுக்கு உதவி முழுவதும் பாதிக்கப்படும் கட்டு மரம் ஒன்றுக்கு 32 ஆயிரம் ரூபாய் வழங்கவும், பகுதி பாதிக்கப்பட்டு பழுது பார்க்கப்பட வேண்டிய கட்டு மரங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதமும், முழுவதும் பாதிக்கப்படும் எப்ஆர்பி (பைபர் படகு) வல்லம் ஆகியவற்றிற்கு 50 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில், அதிகபட்சம் 75 ஆயிரம் ரூபாய் வரையிலும்; பகுதி சேதமடையும் எப்ஆர்பி (பைபர் படகு) வல்லம் ஆகியவற்றுக்கு 20 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்திலும்; முழுமையாக சேதமடைந்த யந்திரப் படகுகளுக்கு 35 சதவீதம் மானியம் என்ற

அடிப்படையில் அதிகபட்சம் 5 லட்சம் ரூபாய் என்ற வீதத்திலும்; பகுதி சேதமடையும் யந்திரப் படகுகளுக்கு பழுது பார்க்கும் செலவில் 60 சதவீதம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக 3 லட்சம் ரூபாய், கட்டுமரங்களுக்கான வலை சேதமடைந்தால் 10 ஆயிரம் ரூபாய்; படகுகளின் வெளிப்புறம் பொருத்தப்படும் யந்திரங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்ற வீதங்களில் நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

பருவமழையினால் சாலைகள், பாலங்கள், இதர அரசு கட்டடங்கள் ஆகியவற்றிற்கு சேதம் ஏற்பட்டால் அவற்றை சீரமைக்க உரிய கருத்துருக்களை உடனுக்குடன் அனுப்ப அரசு அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அந்த அறிக்கையில் முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## வலுவான பயிர் காப்பீட்டுத் திட்டம் வேண்டும்!

பஞ்சாப் மாநில விவசாயிகளை நிலைகுலைய வைத்திருக்கிறது வெள்ளை வண்டுப்பூச்சித் தாக்குதல். பூச்சித் தாக்குதலால் நஷ்டம் அடையப்போகும் விவசாயிகளுக்கு ஈடாக ரூ.640 கோடி ஒதுக்கப்படும் என்று பஞ்சாப் மாநில அரசு அவசர அவசரமாக அறிவித்திருக்கிறது. இந்த ரூ. 640 கோடி இழப்புத்தொகை எந்த அடிப்படையில், எப்படிக் கணக்கிடப்பட்டது என்று தெரியவில்லை. சாகுபடிப் பரப்பில் மூன்றில் இரண்டு மடங்கு பயிர் இந்தப் பூச்சித் தாக்குதலால் சேதம் அடைந்திருக்கிறது.

இந்த விவகாரத்தில் பெரிதாகக் கண்ணுக்குத் தெரிவது என்னவென்றால், பசுமைப் புரட்சியின் தாயகமான பஞ்சாபிலேயே பயிர்க் காப்பீட்டுத் திட்டம் விவசாயிகளால் பின்பற்றப்படவில்லை என்பதுதான். இதற்குக் காரணம், விவசாயிகளுக்கு விவரம் தெரியாததோ அவர்களிடம் பணம் இல்லை என்பதோ அல்ல. இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ள

விதமும், சேதம் ஏற்பட்டால் இழப்பீடு பெறுவதற்கு விவசாயிகள் பட வேண்டிய அலைச்சலும்தான்.

மொத்த விவசாயிகளில் 4% பேர்தான் தங்களுடைய பயிர்களைக் காப்பீடு செய்கின்றனர். அவர்களிலும் பெரும்பாலானவர்கள் வங்கிகளில் கடன் வாங்கி விவசாயம் செய்யும் பெருநிலக்கிழார்கள். வங்கிக் கடன்களுக்கான நிபந்தனைகளில் ஒன்று பயிர்க் காப்பீடு என்பதால், அவர்கள் இன்சூர் செய்கிறார்கள். பயிர் இன்சூரன்ஸ் எனப்படும் காப்பீட்டுத் திட்டம், அந்த முகமை அளிக்கும் ஒற்றைத் திட்டமாகத்தான் இருக்கிறது.

விவசாயி தேர்வுசெய்ய ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்கள் இருப்பதில்லை. காப்பீடு செய்துகொள்ளும் விவசாயி தனி நபர் என்றாலும் அவருடைய நிலத்தில் ஏற்பட்ட சேதத்தை மட்டும் அளவிட்டு நஷ்ட ஈடு வழங்குவதில்லை. அந்தப் பகுதியில் அதே மாதிரி பயிர் சாகுபடியான நிலங்கள், கிராமங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகே சேதம் மதிப்பிடப்படுகிறது.

2013-14-ல் ‘திருத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்’ கொண்டுவரப்பட்டது. 25 கிராமங்களைக் கொண்ட ஒரு வருவாய் வட்டத்தை அலகாகக் கொள்ளாமல், நிலம் இருக்கும் கிராமத்தை மட்டுமே அடிப்படை அலகாகக் கொள்ள அது வழிசெய்தது. இதனால், பாதிப்பைத் துல்லியமாகக் கணக்கிட முடிந்தது. சாகுபடிக்காகும் செலவைக் கணக்கிட்டு அதற்கேற்பப் பிரிமியத்தை நிர்ணயிக்க முடிகிறது. இந்தத் திட்டத்தை விவசாயிகள் ஏற்க தொடக்கக் காலத்தில் பிரிமியத்தில் கணிசமான பகுதியை அரசே மானியமாக ஏற்கலாம். ‘பருவநிலை அடிப்படை’யில் பயிர்க் காப்பீடு செய்யும் முறையைத் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் ஆதரிக்கின்றன. ‘சாகுபடி அடிப்படையிலான’ இழப்பீடு கணக்கிடும் முறையும் நடைமுறையில்

இருக்கிறது. ஆனால், பருவநிலையை அடிப்படையாகக் கொண்ட கணக்கீடு துல்லியமாக இருப்பதில்லை என்பதே அனுபவம்.

பயிர் காப்பீட்டுத் திட்டம் என்பதே வங்கிகளில் பெறும் விவசாயக் கடனையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இப்படிக் காப்பீடு செய்வதால் குடிவாரதாரர்கள், குத்தகைதாரர்கள் விடுபடுவார்கள். பயிர் வைத்துச் சாகுபடி குறைந்தால் அல்லது பொய்த்துப்போனால் அவர்களுக்கு இழப்பீடு கிடைக்காது. இதற்குக் குறுநிதி நிறுவன அமைப்புகள் மூலம் காப்பீடு செய்யப்படும் முறையைப் பரிசீலிக்கலாம்.

விவசாயத்துக்கான பயிர்க் காப்பீடு என்பது விவசாயிகள் நஷ்டப்படாமலும் கடன் தொல்லையில் சிக்காமலும் இருக்க உதவுவதுடன் விவசாயத்தின் பால் மேலும் பலரை ஈர்க்கவும் முதலீட்டைப் பெருக்க

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## திருச்சியில் இரவில் வெளுத்து வாங்கிய மழை: 500 வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது

திருச்சி, நவ. 5–

தமிழ்நாட்டில் பருவமழை தீவிரமடைந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று மாலை 6

மணி முதல் தூறலுடன் மழை பெய்ய தொடங்கியது. இரவில் பலத்த மழை பெய்தது.

பல மணிநேரம் பெய்த மழையால் சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது. திருச்சி மாவட்டத்தில் அதிகபட்சமாக மணப்பாறையில் 49.6 மி.மீ மழை பெய்தது. மற்ற பகுதிகளில் மழை அளவு விபரம் வருமாறு:–

திருச்சி டவுன்–36 மி.மீ., முசிறி–28 மி.மீ., ஏர்போர்ட்–25 மி.மீ., புள்ளம்பாடி–25 மி.மீ., சமயபுரம்–16 மி.மீ., லால்குடி–12.9 மி.மீ. அதே போன்று மற்ற பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது.

திருச்சி மாநகரில் அதிகபட்சமாக 36 மி.மீ., மழை பெய்தது. பல மணி நேரம் கொட்டி தீர்த்த மழையால் வீடுகளை மழை வெள்ளம் சூழ்ந்தது. 41–வது வார்டு பகுதியில் புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் பகுதியில் இருந்து வரும் மழை வெள்ள நீர் கிராப்பட்டி கொல்லாங்குளம் வழியாக கருமண்டபம் சென்று உய்யக்கொண்டான் வாய்க்காலில் சென்று கலக்கும்.

இப்பகுதியில் கே.கே.நகரில் சாலை அகலப்படுத்தும் பணிக்காக சாக்கடைகளை உடைத்ததாலும், வாய்க்கால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாலும் மழை வெள்ளம் வீடுகளை சூழ்ந்தது.

41–வது வார்டு அன்பு நகர், காந்தி நகர், கிருஷ்ண மூர்த்தி நகர், பாரதி நகர், தொண்டமான் காலனி, கணேசன் நகர், ராஜராஜன் நகர், ராக் போர்ட் நகர், சிம்கோ காலனி, சக்தி நகர், காவேரி நகர் ஆகிய பகுதிகளில் மழை நீர் வீடுகளை சூழ்ந்ததால் மக்கள் வெளியில் வரமுடியவில்லை.

அன்பு நகரில் 3, 4, 5–வது தெருக்களில் பல வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்தது. இதனால் மக்கள் மாடி வீடுகளில் தஞ்சம் அடைந்தனர். இதனால் விடிய விடிய மக்கள் தூங்காமல் தவித்தனர். இதே போன்று 40–வது வார்டு விஸ்வாஸ் நகர், விரிவாக்க பகுதிகளிலும் மழை வெள்ளம் சூழ்ந்தது. பல தெருக்களில் மழை நீர் வடிகால்கள் வசதி

இல்லை. இதனால் மழை வெள்ளம் வெளியேற முடியாமல் தெருக்களை சூழ்ந்துள்ளது.

மழை நீர் வெளியேறும் வகையில் 41–வது வார்டு கவுன்சிலர் கவிதா செல்வம் மற்றும் மாநகராட்சி ஊழியர்கள் அடைப்புகளை அகற்றி மழை வெள்ளம் வெளியேறும் வகையில் பணிகளை செய்தனர். இன்று காலை பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதே போன்று செந்தண்ணீர்புரம், அரியமங்கலம், பீமநகர், ஆழ்வார்தோப்பு, சிந்தாமணி, மதுரை ரோடு உள்ளிட்ட பகுதிகளிலும் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

மணப்பாறை, பொன்னணியாறு, கரூர் பகுதிகளில் அதிக மழை பெய்து வருகிறது. இதனால் கோரையாற்றுக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரித்து உள்ளது. கோரையாற்றில் ஆகாயத்தாமரைகள், புதர்கள் மூடி கிடப்பதால் மழை வெள்ளம் ஊருக்குள் புகுந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

பருவமழை தீவிரமடைந்து வருவதால் ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆகாயத்தாமரைகளை அகற்றி மழை வெள்ளம் வெளியேறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கரூர், பெரம்பலூரில் பலத்த மழை: அரியலூர் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு விடுமுறை**



அரியலூர், நவ. 5– தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தொடங்கியதையடுத்து பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. அரியலூர் மாவட்டத்திலும் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் நேற்றிரவு முதல் இன்று காலை வரை விடிய விடிய மழை பெய்தது. இதன் காரணமாக சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தொடர் மழையினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதையடுத்து பள்ளிகளுக்கு விடுமுறை அளித்து மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் உத்தரவிட்டார்.

கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் மழையினால் அரியலூர் செட்டி ஏரி முழுவதும் நிரம்பியுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மாவட்டத்தில் அதிகபட்சமாக திருமானூரில் 23 மி.மீ. மழை பெய்துள்ளது. அரியலூரில் 9 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

பலத்த மழை காரணமாக அரியலூர்–ராவத்தன்பட்டி சாலை குண்டும் குழியுமாக மாறியுள்ளதோடு அந்த வழியாக செல்ல முடியாத அளவுக்கு சாலை துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். செட்டி ஏரி கால்வாயில் ஆக்கிரமிப்புகள் மிகுந்துள்ளதால் அதில் தண்ணீர் தேங்கி வெளியேறி வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வரும் நிலையில் நேற்றும் பலத்த மழை பெய்தது. இதில் செட்டிக்குளத்தில் 55 மி.மீ., பெரம்பலூரில் 60 மி.மீ., வேப்பந்தட்டையில் 30 மி.மீ., தழுதாழையில் 23 மி.மீ., பாடாலூரில் 27 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

கரூர் மாவட்டத்தில் நேற்றிரவு முதல் இன்று அதிகாலை வரை விடிய விடிய பலத்த மழை கொட்டியது. இதன் காரணமாக குண்டானிபாளையம் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்த மழை அளவு மில்லிமீட்டரில் வருமாறு:– க.பரமத்தி –151.6, பாலவிடுதி–95.4, மயிலம்பட்டி–85.

மாவட்டத் தில் அதிகபட்சமாக க.பரமத்தியில் 151.6 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

## பாசனத்துக்காக பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு அணைகள் நாளை திறப்பு: ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை, நவ. 5–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து பிசான பருவ சாகுபடிக்காக தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள தாமிரபரணி ஆற்றின் கீழ் 11 கால்வாய்களின் மூலம் பயன்பெறும் நேரடி மற்றும் மறைமுக பாசனப் பரப்புகளுக்கு பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து 6.11.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள 86,107 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறி உள்ளார்.

## தொடர் மழை எதிரொலி: முல்லைப்பெரியாறு அணையில் துணைக்குழு நாளை ஆய்வு



கம்பம், நவ.5–

வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருவதால் முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டமும் உயர்ந்து கொண்டே வருகிறது. அணையின் பராமரிப்பு மற்றும் கண்காணிப்பு பணிக்கு சுப்ரீம்கோர்ட்டு உத்தரவுபடி மூவர் குழு அமைக்கப்பட்டது.

இந்த மூவர் குழுவிற்கு உதவும் வகையில் மத்திய நீர்வள ஆணையத்தின் செயற்பொறியாளர் அம்பரீஸ் கரீஸ் கிரீஸ் தலைமையிலான 5 பேர் கொண்ட துணைக்குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவில் தமிழத்தின் சார்பில் பொதுக்குழு அதிகாரிகள் மாதவன், சவுந்திரம் ஆகியோரும், கேரள நீர்பாசன துறை அதிகாரிகள் ஜார்ஜ்டேனியல், பிரசீது ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தொடர் மழை காரணமாக அணையை பார்வையிட்டு துணைக்குழு நாளை (6–ந் தேதி) ஆய்வு நடத்த வேண்டும் என மூவர் குழு தலைவர் நாதன் உத்தரவிட்டுள்ளார். அதன்படி துணைக்குழுவினர் நாளை முல்லைப் பெரியாறு அணையில் ஆய்வு நடத்த வருகின்றனர்.

கடந்த அக்டோபர் மாதம் 7–ந் தேதி நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் பெரியாறு, பேபி அணையின் பராமரிப்பு பணிகளுக்கு கேரள நீர்பாசன

துறையினரிடம் அனுமதி பெற வேண்டும் என அந்த மாநில பிரதிநிதிகள் வற்புறுத்தியதால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டு கூட்டம் பாதியிலேயே முடிந்தது. கடந்த 2 வாரங்களுக்கு முன்பு மதுரையில் நடந்த ஆய்வு கூட்டத்தில் இது குறித்து மூவர்குழு தலைவர் நாதனிடம் தமிழக துணைக்குழு பிரநிதிகள் புகார் மனு அளித்தனர். எனவே நாளை நடைபெறும் கூட்டத்தில் இது குறித்த பிரச்சினைக்கு முடிவு தெரிய வரும் என தமிழக அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

மேலும் துணைக்குழு அணையின் நீர்வரத்து, மழை பதிவு, கசிவு நீர் வெளியேற்றம், பேபி அணை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு நடத்த உள்ளனர்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் விடிய விடிய பெய்த மழை



திண்டுக்கல், நவ.5–

திண்டுக்கல் மாவட்டத்தில் நேற்று இரவு விடிய விடிய மழை பெய்தது.

வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்துள்ளதால் திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று இரவு விடிய விடிய மழை பெய்தது. திண்டுக்கல், நத்தம், கொடைரோடு, கொடைக்கானல், வத்தலக்குண்டு, ஒட்டன் சத்திரம், பழனி, வேடசந்தூர், குஜிலியம்பாறை, செம்பட்டி, ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்தது.

இதனால் மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் காமராஜர் அணை, பாலாறு பொருந்தாலாறு அணை, பரப்பலாறு அணை, குதிரையாறு அணை, அழகாபுரி அணை மற்றும் குளங்களுக்கு நீர்வரத்து சற்று அதிகரித்து

உள்ளது. மழை காரணமாக மானாவாரியில் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே சமயம் தோட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள காய்கறிகள் பாதிக்கப்படுவதால் ஒரு சில விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர்.

தொடர்ந்து மழை பெய்து வருவதால் சில இடங்களில் சாலைகள் சேதம் அடைந்துள்ளன.

பெரும்பாறை, பண்ணைக்காடு, தாண்டிக்குடி, மங்களம் கொம்பு, கே.சி.பட்டி ஆகிய பகுதிகளில் சாலையோரம் மண் சரிவு ஏற்பட்டதன் காரணமாக மரங்கள் முறிந்து விழுந்தன. மஞ்சள்பரப்பு கிராமத்தில் இன்று காலை ஒரு வீடு இடிந்து விழுந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. வீட்டுக்கு வெளியே மேய்ந்து கொண்டிருந்த 10–க்கும் மேற்பட்ட கோழிகள் சுவர் இடிந்து விழுந்ததில் பலியாகின.

கொடைக்கானலில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்து விட்டது. ஏற்கனவே சுற்றுலா வந்தவர்கள் வெளியே சென்று பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அவர்கள் விடுதிகளிலேயே முடங்கி உள்ளனர்.

## விவசாய உயர் தொழில்நுட்பத்தை அறிந்து வர 40 தமிழக விவசாயிகள் சீனா, இஸ்ரேல் செல்கிறார்கள்



சென்னை, நவ.5-

முதல்-அமைச்சர் ஜெயலலிதா தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற அதே அக்கறையுடன் விவசாயத்தை மேம்படுத்துவதிலும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்.நம்மிடம் இருக்கும் தொழில்நுட்பத்தை விட இஸ்ரேல் போன்ற வெளிநாடுகளில் உயரிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பாசனநீரை சிக்கனமாக பாய்ச்சி அதிக மகசூல் எடுக்கிறார்கள்.அதே தொழில்நுட்பத்தை தமிழக விவசாயிகள் அறிய வேண்டும் என்ற உயரிய நோக் கத்துடன் கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் 110-வது விதியின் கீழ் இதற்கான பல அறிவிப்புகளை முதல்- அமைச் சர் ஜெயலலிதா வெளியிட்டார். அவருடைய சீரிய நடவடிக்கை காரணமாக தோட்டக் கலைத்துறை தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.சீனா காய்கறி சாகுபடியில் தமிழ்நாட்டை விட உற்பத்தியிலும், உற்பத்தி திறனிலும் நிறைவிலும் மிக அதிகமாக இருக்கிறது. எந்த காலத்திலும் எல்லா பழங்கள், காய்கறிகள் மகசூல் அதிகமாக கிடைக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வருகிறார்கள்.அவர்கள் என்ன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, எந்த முறையில் சாகுபடி செய்கிறார்கள்? என்பதை அறிந்து வர தமிழகம் முழுவதும் இருந்து காய்கறி விவசாயத்தில் தீவிரமாக ஈடுபடுபவர்களையும், அதிலும் குறிப்பாக படித்துவிட்டு இந்த

விவசாயத்தில் ஈடுபடுபவர்களாக 20 விவசாயிகளை தேர்ந்தெடுத்து அரசு செலவில் சீனாவுக்கு அனுப்ப முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். தண்ணீர் வளம் இல்லாத நாடு இஸ்ரேல். இங்கு கடல்நீரை குடிநீராக்கி தான் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்கிறார்கள். ஒரு லிட்டர் தண்ணீர் இந்திய மதிப்பின்படி ரூ.252 என்றாலும், தண்ணீரை சொட்டுநீர் பாசன முறை மூலம் சிக்கனமாக பயன்படுத்தி நம்மை விட மிக உயரிய தொழில்நுட்பத்தின் மூலம் சாகுபடி முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஒரு புறம் பாசன நீர் சிக்கனம், மற்றொருபுறம் விளைபொருள் தரம் உயர்வு, உயரிய அறிவியல் தொழில்நுட்பத்தை விவசாயத்தில் பின்பற்றுதல் என்று மிக உயரிய நிலையில் விவசாயத்தில் உலகிற்கே 'ரோல் மாடலாக' திகழ்கிறார்கள்.ஒரு ஏக்கர் நிலத்தில் தமிழ்நாட்டில் 40 மாமரங்கள் சாகுபடி செய்யப்படுகிறது என்றால், இஸ்ரேலில் 647 மாமரங்கள் வளர்கின்றன. இதுபோல நாம் 6 ஏக்கர் நிலத்துக்கு பயன்படுத்தும் தண்ணீரை இஸ்ரேலில் 10 ஏக்கர் நிலத்துக்கு சொட்டுநீர் பாசனமாக பயன்படுத்துகிறார்கள். அவர்களுடைய தொழில்நுட்பத்தை அறிந்து வருவதற்காக மேலும் 20 விவசாயிகளை அரசு செலவில் இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்ப முதல்- அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இந்த 40 விவசாயிகளும் எல்லா மாவட்டங்களை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். விவசாயத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர்களாக இருக்க வேண்டும். படித்தவர்களாக இருந்தால் மிகவும் நல்லது. இவர்கள் சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் தொழில்நுட்பத்தை அறிந்து கொண்டு, தங்கள் விளைநிலங்களில் பயன்படுத்த வேண்டும். தங்களுடைய நிலத்தை மாதிரி பண்ணையாக அமைத்து மற்றவர்களை தெரிந்து கொள்ள செய்ய வேண்டும், தாங்கள் கற்ற தொழில்நுட்பத்தை மற்ற விவசாயிகளுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது தான் தமிழக அரசின் நோக்கமாக உள்ளது.தேர்வு பணிகள் முதல்- அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்பேரில் மிக தீவிரமாக நடந்து வருகிறது. இதில்,

பாரபட்சம் இருக்கக்கூடாது. தகுதியானவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தேர்வுகள் நடக்கிறது.அநேகமாக ஜனவரி மாதம் இந்த 40 விவசாயிகளையும் சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு முதல்-அமைச்சர் ஜெயலலிதா அனுப்பி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விகடன்

**டெங்கு காய்ச்சலுக்கு இனிப்பான மருந்து: தமிழக அரசு வழங்குகிறது!**



**சென்னை:** தமிழகத்தில் பரவியுள்ள டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்தவும், நோயால் பாதித்தவர்களைக் குணப்படுத்தவும் இனிப்பான சித்த மருந்தான ஆடாதொடை மணப்பாகு வழங்கிட தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதை அனைத்து அரசு சித்த மருத்துவமனைகள், மருந்தகங்களில் இருப்பு வைக்க தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

தொற்று நோய்கள் பரவும் மழைக்காலத்தில் தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக நிலவேம்புக் குடிநீர், பப்பாளி இலைச்சாறு, மலைவேம்புக் குடிநீர் உள்ளிட்ட சித்த மருந்துகள் மருந்துகள் ஏற்கனவே இலவசமாக வழங்கப்படுகின்றன.இந்த நிலையில், வட கிழக்குப் பருவ மழையால், வைரஸ் காய்ச்சல், டெங்கு, சிக்குன் குனியா உள்ளிட்ட தொற்று நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன. இதைக் கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனாலும் நாள்தோறும் மருத்துவமனைகளில் புதிய நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் மக்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது.

இதனையடுத்து திமுக, பாமக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் டெங்குவைக் கட்டுப்படுத்த தமிழக அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. இதனைத் தொடர்ந்து தமிழக அரசு சார்பில் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.புதியதாக வழங்கப்படவுள்ள இந்த ஆடாதொடை மணப்பாகு, உடலின் உள் உறுப்புகளில் நிகழும் ரத்த கசிவுக்கும் ஏற்றது. நிலவேம்புக் குடிநீர் இயற்கையாகவே கசப்புத்தன்மை வாய்ந்தது. அதானால் குழந்தைகளுக்கு அதை புகட்டுவது பெற்றோர்களுக்கு சிரமமாக இருந்தது. எனவே, எளிதில் பருகும்படியான மருந்தை அறிமுகப்படுத்த அரசு சித்த மருத்துவர்களுடன் தீவிரமாக ஆலோசித்தது. இதில், "ஆடாதொடை மணப்பாகு" எனும் இனிப்பு மருந்தை வழங்கலாம் என்று தமிழக அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது.சளி, காய்ச்சல் பாதிப்புகளுக்கும், டெங்கு உள்ளிட்ட தொற்று நோய்கள் தீவிரமடைந்தால் உள்உறுப்புகளில் ஏற்படும் ரத்தக் கசிவுக்கும் இந்த மருந்து வழங்கப்பட்டு வந்தது. இதையடுத்து, இந்த மருந்தை அதிக அளவில் அனைத்து அரசு சித்த மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் இருப்பு வைக்கும்படி தமிழக அரசு

அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து சித்த மருத்துவர்கள் சிலர் கூறுகையில், "5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆடாதொடை மணப்பாகில் 2.5 - 5 மி.லி வரை எடுத்து, அதனை 10 மி.லி. நிலவேம்புக் குடிநீருடன் கலந்து கொடுக்க வேண்டும். இதை குழந்தைகள் எளிதில் பருகுவர். சித்த மருத்துவர்களின் ஆலோசனைப்படியே மருந்தைப் பருக வேண்டும்" என்று தெரிவித்தனர்.

**பருவமழை உயிரிழப்பு, சேதங்களுக்கான இழப்பீட்டை உயர்த்தினார் முதல்வர்!**



**சென்னை:** பருவமழை காரணமாக ஏற்படும் உயிரிழப்பு, சேதங்களுக்கான இழப்பீட்டை உயர்த்தி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த சில நாட்களாக தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. எதிர் வரும் டிசம்பர் மாதம் முடிய பருவமழை தொடர்ந்து நீடிக்கும். கன மழையை எதிர்கொள்ளும் வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க நான் அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும்,

காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளேன்.

அரசு நிர்வாகம் மேற்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி, பருவமழையின் போது உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் ஏற்படக் கூடும். அவ்வாறு பருவ மழையால் பாதிக்கப்படுவோருக்கு உரிய நிவாரண உதவிகளை விரைந்து வழங்கவும் நான் உத்தரவிட்டுளேன்.

பருவமழை காரணமாக ஏற்படும் உயிரிழப்பு, கால்நடை இழப்பு, சேதமடைந்த குடிசைகளுக்கான இழப்பீட்டுத் தொகை ஆகியவற்றை உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். அதன்படி, மழை காரணமாக உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிவாரண உதவியாக 4 லட்சம் ரூபாய்; முழுவதும் சேதமடைந்த நிரந்தர வீடு ஒன்றுக்கு 95,100 ரூபாய்; முழுவதும் சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு 5,000 ரூபாய்; பகுதி சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு 4,100 ரூபாய்; மற்றும் 10 கிலோ அரிசி, உடை மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய்; பசு மற்றும் எருமை மாடு உயிரிழப்புக்கு 30,000 ரூபாய்; ஆடு, பன்றி உயிரிழப்புக்கு 3,000 ரூபாய்; கோழி உயிரிழப்புக்கு 100 ரூபாய்; என நிவாரண உதவித் தொகைகள் வழங்க நான் உத்தரவிட்டு உள்ளேன்.

மேலும், வெள்ளம் காரணமாக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படும் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி, ஒரு புடவை, ஒரு வேட்டி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவற்றுடன் 1,000 ரூபாய் ரொக்கப்பணம் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். முகாம்களில் அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் ஆகியவையும் வழங்கப்படும். மழையால் பாதிக்கப்படும் நெல் மற்றும் நீர்ப்பாசனம் பெறும் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 13,500/- ரூபாய்; மானாவாரி பயிருக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 7,410/- ரூபாய்; நீண்டகால பயிர்களுக்கு

ஹெக்டேர் ஒன்றுக்கு 18,000/- ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டுளேன்.முழுவதும் பாதிக்கப்படும் கட்டு மரம் ஒன்றுக்கு 32,000/- ரூபாய் வழங்கவும், பகுதி பாதிக்கப்பட்டு பழுது பார்க்கப்பட வேண்டிய கட்டு மரங்களுக்கு 10,000 ரூபாய் வீதமும், முழுவதும் பாதிக்கப்படும் எஃப்.ஆர்.பி. வல்லம் ஆகியவற்றிற்கு 50 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில், அதிகபட்சம் 75,000 ரூபாய் வரையிலும்; பகுதி சேதமடையும் எஃப்.ஆர்.பி. வல்லம் ஆகியவற்றுக்கு 20,000 ரூபாய் என்ற வீதத்திலும்; முழுமையாக சேதமடைந்த இயந்திரப் படகுகளுக்கு 35 சதவீதம் மானியம் என்ற அடிப்படையில் அதிகபட்சம் 5 லட்சம் ரூபாய் என்ற வீதத்திலும்; பகுதி சேதமடையும் எந்திரப் படகுகளுக்கு பழுது பார்க்கும் செலவில் 60 சதவீதம் என்ற அடிப்படையில் அதிகபட்சமாக 3 லட்சம் ரூபாய், கட்டுமரங்களுக்கான வலை சேதமடைந்தால் 10,000 ரூபாய்; படகுகளின் வெளிப்புறம் பொருத்தப்படும் எந்திரங்களுக்கு 5,000 ரூபாய் என்ற வீதங்களில் நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

பருவமழையினால் சாலைகள், பாலங்கள், இதர அரசு கட்டடங்கள் ஆகியவற்றிற்கு சேதம் ஏற்பட்டால் அவற்றை சீரமைக்க உரிய கருத்துருக்களை உடனுக்குடன் அனுப்ப அரசு அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்" என்று கூறி உள்ளார்.